
உகண்டா பாதுகாப்பு அமைச்சர் குழுவினர்
பக். 3


சிரிய அமைதிப் பேச்சில் முன்னேற்றம் இல்லை
பக். 7


மீனவர்கள் போராட்டம்
பக். 10


இலங்கைக்கு இன்னிங்ஸ் வெற்றி
பக். 23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 066 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 18, வெள்ளி 31.01.2014


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

# சர்வதேச விசாரணையே தேவை நிஷாவிடம் கோரும் கூட்டமைப்பு

## கொழும்பில் இன்று இரவு விசேட சந்திப்பு

கொழும்பு, ஜனவரி 31
"இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே தேவை இதுவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும். சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் அனைத்துலக நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா கட்டாயம் நிறைவேற்றியே ஆகவேண்டும்."

இவ்வாறு இன்று உத்தியோக பூர்வப் பயணம் மேற்கொண்டு கொழும்பு வரும் தெற்கு மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலிடம் சம்பந்தன் எம்.பி. தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை இலங்கை அரசு ஒருபோதும் வழங்கமாட்டாது. எனவே, சர்வதேச சமூகம் தான் தமிழருக்கான கௌரவமான அரசியல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றும்

21 ஆம் பக்கம் பார்க்க

## எலும்புகள் மட்டுமே நேற்று மீட்பு


மீட்கப்பட்ட எலும்பு எச்சங்கள்

மன்னார்,ஜன 31
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி நேற்று வியாழக்கிழமை 18 ஆவது தடவையாகத் தோண்டப்பட்ட போது சிறு சிறு மனித எலும் புத்துண்டுகள் மட்டுமே மீட்கப்பட்டன.

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல்.வைத்தியரட்ண குழுவினரால் புதைகுழி நேற்றுத் தோண்டப்பட்

21 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பீரிஸ் டில்லியில் ஜெனிவா காய் நகர்த்தலில்

### 82 நாடுகளின் தூதுவர்களுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன.31
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுகளை எதிர்கொள்ளும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ள இலங்கை இதற்காக இந்தியத் தலைநகர் டில்லியிலுள்ள 82 நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நேற்றுமுன்தினம் புதன்கிழமை, இலங்கையில் தூதரகங்களைக் கொண்டிராத நாடுகளின் தூதுவர்களை டில்லியில் சந்தித்து, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்

21 ஆம் பக்கம் பார்க்க

## அரசு போர்க் குற்றம் இழைக்காவிடின் சர்வதேச விசாரணைக்கு அச்சம் ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் வடக்கு முதலமைச்சர்


முதலமைச்சர் விக்னேஸ்வரன்

கொழும்பு, ஜன.31
வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பே என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், அரசு போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லையாயின் ஏன் சர்வதேச விசாரணைக்கு அஞ்சவேண்டும் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வடக்கு மாகாண சபையில் கடந்த திங்கள்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டி

21 ஆம் பக்கம் பார்க்க

## உகண்டா பாதுகாப்பு அமைச்சருக்கு பலாலியில் செங்கம்பள வரவேற்பு


பலாலியில் வரவேற்கப்படும் உகண்டா அமைச்சர்.

வலி.வடக்கு,ஜன 31
யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வருகைதந்த உகண்டா நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஒடங்கோ ஜேஜோவுக்குப் பலாலி விமானத் தளத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தலைமையில் இராணுவ,விமானப்படை உயர் அதிகாரிகள் உகண்டா பாதுகாப்பு அமைச்சரையும் அவரது குழுவினரையும் விமானத் தளத்தில் வரவேற்றனர்.

உகண்டா பாதுகாப்பு அமைச்சருடன் பிரதிப் பாதுகாப்புச் செயலர் லெப்டினன்ட் ஜெனரல் சாள்ஸ் அங்கினா, உகண்டாவுக்கான இலங்கைத் தூதுவர் வி.கணநாதன், பிரிகேடியர் ஜேம்ஸ் முஜிரா, பிரிகேடியர் ஜகோபா,பிரிகேடியர் ராமதன்

21 ஆம் பக்கம் பார்க்க

## பேசாலைக் கடற்படை முகாமை நில அளவை செய்வதற்கு எதிர்ப்பு

### நேற்றுத் திரண்டனர் மக்கள்


கடற்படை அதிகாரியுடன் உரையாடும் அருட் தந்தை.

மன்னார்,ஜன. 31
மன்னார் பேசாலை 'வெற்றி மாதா' குடியேற்றத்தில் அமைந்துள்ள இலங்கைக் கடற்படை முகாமை நில அளவை செய்யும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட போது, அதனைத் தடுத்து நிறுத்திய அந்தக் கிராம மக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் கிராம மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-
மன்னார் பேசாலை புனித வெற்றி மாதா ஆலயத்துக்குச் சொந்தமான புனித 'வெற்றி

21 ஆம் பக்கம் பார்க்க

## மிதி வெடியகற்றும் பணியாளர் காயம்

வடமராட்சி,ஜன.31
வடமராட்சி கற்கோவளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடி விபத்தில் சிக்கி 'ஹலோ ட்ரஸ்ட் ' மிதி வெடி அகற்றும் நிறுவனத்தின்

21 ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச சாரதி, நடத்துநர் மீது ஊர்காவற்றுறையில் தாக்குதல்

### கண்டித்து நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன 31
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்களில் பணியில் இருந்த சாரதி மற்றும் நடத்துநரைத் தனியார் பஸ் சாரதி, நடத்துநர் ஆகியோர் ஊர்காவற்றுறையில் வைத்துத் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை டிப்போ பணியாளர்கள் நேற்று மதி

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீனவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.31
இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 இலங்கை மீனவர்கள் படகுடன் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் புதனன்றும் 38 இந்திய மீனவர் படகுகளுடன் கைது


காங்கேசன்துறை கடற்படை முகாமில் இந்திய மீனவர்.

யாழ்ப்பாணம், ஜன.31
நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 38 பேரும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ மரக்கறி விற்பனைக்கு விரைவில் நல்லதொரு தீர்வு

### விவசாயிகளிடம் கூறினார் யாழ்.தளபதி

யாழ்ப்பாணம், ஜன.31
இராணுவம் மரக்கறிகளை விற்பனை செய்வதால் விவசாயிகள் பாதிப்படைவது தொடர்பில், விரைவில் நல்லதொரு தீர்வை வழங்குவதாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனங்களின் தலைவர்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் படுகொலைக்கு நீதி கோரி ஜெனிவாவை நோக்கிய நடை பயணம்

## ஐரோப்பிய வாழ் தமிழ் மக்கள் ஆரம்பித்தனர்

கொழும்பு. ஜன.31
ஈழத் தமிழர் படுகொலைக்கு நீதி கோரி ஜெனிவா நோக்கிய ஆயிரம் கிலோ மீற்றர் நடை பயணத்தை, ஐரோப்பிய வாழ் தமிழ் மக்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை நெதர் லாந்திலுள்ள சர்வதேசக் குற்ற வியல் நீதிமன்றத்தின் முன் பாக ஆரம்பித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் தமிழ் மக்கள் கொல் லப்பட்டமை.பல தசாப்தங்க ளாகச் சிங்கள அரசினால் முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட இன அழிப்பு ஆகியவற்றுக்கு நீதி கோரி இந்த நடைபயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஜெனிவா வில் இடம் பெறவுள்ளது. இந்த அமர்வு நடைபெற்றுக் கொண் டிருக் கும்வேளை மார்ச் 10 ஆம் திகதி நடை பயணம் ஜெனிவா வைச் சென்றடையவுள்ளது.

ஈழத் தமிழருக்காகத் தீக் குளித்த முத்துக்குமாருக்கு ஈகச் சுடரேற்றப்பட்டு இரு நிமிட அக வணக்கத்தின் பின்னர் நேற்று முன்தினம் புதன் கிழமை இந்த நடைபயணம் ஆரம்பமானது.

நெதர்லாந்திலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்பாக ஒன்று கூடிய தமிழ் மக்கள் இந்த அஞ்சலி நிகழ் வுகளைத் தொடர்ந்து நீதிக் கானநடைபயணத்தைதொடங் கினர். (த-5)



*நடை பயணத்தை ஆரம்பிக்கும் புலம்பெயர் தமிழர்கள்.*

# பாரவூர்தி சங்கத்தினருக்கும் மணல் அகழ்வதற்கு உரிமம்

யாழ்ப்பாணம், ஜன.31
யாழ்.மாவட்டப் பாரவூர்திச் சங் கத்தினருக்கு மணல் அகழ் வதற்கான மற்றும் விநியோ கிப்பதற்கான உரிமம் வழங் கப் படுவது தொடர்பில் சாதக மாகப் பரிசீலிக்கப்பட்டு வருவ தாக யாழ். மாவட்ட அரச அதி பர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

குறைந்த விலையில் மணல் விநியோகிப்பதற்குத் தயாராக வுள்ளதாகவும், தமக்கான உரிமத்தைப் பெற்றுத் தருமா றும் பாரவூர்தி உரிமையாளர் சங்கம் அரச அதிபருக்குத் தெரி யப்படுத்தியிருந்தது. இதைய டுத்தே இந்த உரிமம் அவர் களுக்கு வழங்கப்படுவது தொடர்பில் சாதகமாகப் பரிசீ லிக்கப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

பாரவூர்தி உரிமையாளர் சங் கத்துக்கும் எனக்கும் இடை யில் இடம்பெற்ற கலந்துரை யாடலில் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைவாக குறித்த உரிமத்தை வழங்கும் புவிச் சரிதவியல் திணைக்களத் துடன் தொடர்பு கொண்டு மேல திக நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

பாரவூர்திச் சங்கத்துக்கு உரிமை வழங்குவது தொடர்பில் அவர் கள் சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்துள்ளனர். (த-5-86)

# இரவுவேளை மதுபோதையில் வீட்டுக்குள் புகுந்த பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜன. 31
இரவு நேரம் மது போதையில் அத்துமீறி வீடு புகுந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. மிருசுவில் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள தவசிக்குளம் வீதியி லுள்ள வீடு ஒன்றிலேயே நேற்று முன்தினமிரவு 9.30 மணி யளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோ கத்தர் மதுபோதையில் வீட்டி னுள் புகுந்து திருட்டு முயற்சி யில் ஈடுபட்டதை அவதானித்த மக்கள் அது தொடர்பாகக் கொடி காமம் பொலிஸாருக்குத் தக வல் வழங்கினர். இதையடுத்து கொடிகாமம் பொலிஸார் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை அழைத்துச் சென்றனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலை யத்தில் பணிபுரியும் தென்பகு தியைச் சேர்ந்த பொலிஸ் உத்தி யோகத்தரே இந்தத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது, பொறுப் பதிகாரி வெளியே சென்றுவிட் டார் என்று கூறி தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது. (த-7-4-400)

# டெசோவின் கூட்டம் நாளை சென்னையில்

சென்னை, ஜன.31
இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது தொடர் பில் தமிழின உணர் வாளர் களை ஒன்று திரட்டிய கலந் துரையாடல் நாளை சனிக் கிழமை இடம்பெறவுள்ள தாகப் பழ.நெடுமாறன் அறிவித் துள்ள நிலையில், டெசோ அமைப்பின் கூட்டமும் நாளை காலை அண்ணா அறிவால யத்தில் இடம்பெறும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனி வாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக இந்திய அரசு செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, மத் திய, மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுப்பது தொடர் பில் கலந்துரையாடுவதற் காகத் தமிழின உணர் வாளர் கள்,மனித உரிமை ஆர்வலர் களுக்கு அழைப்பு விடுக்கப்பட் டிருந்தது.

இந்தக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இடம் பெறும் என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்திருந் தார்.

இந்த நிலையில், தமிழீழ ஆத ரவாளர்கள் கூட்டமைப்பான டெசோவின் மாநாடு நாளை சனிக்கிழமை காலை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி தலை மையில் நடைபெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# ஆழியவளை அனர்த்த பாதுகாப்புப் பாதை புனரமைக்கப்படாமையால் பெரும் இடர்கள்

கொழும்பு, ஜன.31
ஆழியவளை மற்றும் அத னோடு இணைந்த கிராமங் களுக்கான அனர்த்த பாதுகாப் புப் பாதை இன்னமும் புனர் நிர்மாணம் செய்யப்படவில்லை.

ஆழியவளையிலிருந்து இயக் கச்சி வரையிலான 1.5 கிலோ மீற்றர் நீளமான பாதை புனர் நிர் மாணம் செய்யப்படாமையால், அனர்த்த வேளைகளில் தாம் பெரும் உயிர் மற்றும் பொருள் இழப்புக்களைச் சந் திக்க நேரிடும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் கடற்கரை யோரக் கிராமமாக அமைந் துள்ள ஆழியவளை மற்றும் அதனோடு இணைந்த கிரா மங்கள் இலங்கை அரசால் சுனாமி பாதிப்புக்குள்ளாகக் கூடிய இடங்கள் என்று அடை யாளப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்த வேளைகளில் இந் தக் கிராமத்துக்கான பாதுகாப் புப் பிரதேசமாக இயக்கச்சியி லுள்ள பாடசாலையொன்றே தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் அந்தப் பாதுகாப்புப் பிரதேசத்துக்குச் செல்வதற்குத் தற்போதுள்ள நிலையில் அந்த மக்கள், மருதங்கேணிச் சந் தியை வந்தடைந்து புதுக்காட் டுச் சந்தியினூடாகவே இயக் கச்சிக்குச் செல்ல வேண்டும்.

அத்துடன் அனர்த்த வேளை களில் கடற்கரையோரப் பாதை யைப் பயன்படுத்தியே வர வேண்டிய சூழ்நிலையில் மக் கள் உள்ளனர்.

கிட்டத்தட்ட 15 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்தே அவர் கள் பாதுகாப்பான பிரதேசத்தை அடைய முடியும்.

கடந்த காலத்தில் ஆழியவ ளைக் கடல்நீரேரியினூடாக இயக்கச்சி நோக்கிய பாதை அமைந்திருந்தது. அந்தப் பாதை போர் காலத்தில் முற்றாகச் சேதமடைந்து, தடயமே இல் லாதவாறு அழிவடைந்துள் ளது. இந்தப் பாதை புனர்நிர் மாணம் செய்யப்பட்டால், ஆழி யவளை மற்றும் அதனை அண்டிய கிராமங்களின் ஆ ரத்து 200 இற்கு மேற்பட்ட குடும் பங்கள் குறித்த 1.5 கிலோ மீற் றர் நீளமான பாதையினூடாக இனங்காணப்பட்ட பாதுகாப் புப் பிரதேசத்தை வந்தடைய முடியும்.

எனவே குறித்த பாதையை புனர்நிர்மாணம் செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்தினர் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

# சிங்கள ராவய அமைப்பின் ஆர்ப்பாட்டங்களுக்கு தடை

கொழும்பு, ஜனவரி, 31
அக்மீமன தயாரத்ன தேரர் உட்பட சிங்கள ராவய அமைப் பின் சகல பிக்குமாருக்கும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் தற் காலிகத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

பிரதமரின் அலுவலகத்துக்கு எதிரில் அண்மையில் ஆர்ப் பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து குழப்பம் விளைவிக் கும் வகையில் நடந்து கொண் டமை தொடர்பில் தாக்கல் செய்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வியா ழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ராவய அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் பிரதமரின் அலுவலகத்துக்குள் பலவந்தமாகப் பிரவேசிக்க முயற்சித்துள்ளனர்.

இவ்வேளை யில் ஆர்ப்பாட்டக் காரருக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட் டது.

மேற்படி வழக்கு விசாரணை முடியும்வரை சிங்கள ராவய அமைப்பின் பிக்குமார் எவ ரும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது. (த-10)

# மீன் சந்தை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.31
வேலணை துறையூரில் " புறநெகும " திட்டத்தின் கீழ் நவீன மீன் சந்தையும் - அத னோடு இணைந்த வீதியும் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இரண்டு கோடி ரூபா நிதிப் பங்களிப்பில் புதிய மீன்சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தலை மையில் நடைபெறும் திறப்பு விழாவில் பிரதம விருந்தின ராக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் - வேலணை பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுத் தலைவரு மான [illegible] (உதயன்) கலந்து கொண்டு புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைக்கவுள்ளார். (த-50)

# தமிழகத்தில் ஏற்பட்ட கால்வாய் நோய் சமகாலத்தில் குடாநாட்டு மாடுகளுக்கு

## வடமாகாண விவசாய அமைச்சு ஆராய்கிறது

யாழ்ப்பாணம், ஜன.31
தமிழகத்தில் விலங்குகளுக்கு ஏற்பட்ட கால்வாய் நோய் அதே காலப்பகுதியில் யாழ்.குடா நாட்டிலும் பரவியமை தொடர் பில் ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சு, தற்போது யாழ்.குடாநாட்டில் இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கிளி நொச்சியில் அது இனங் காணப் பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

தமிழ் நாட்டில் கடந்த வருட இறுதியில் ஆடு,மாடுகளுக்குக் கால்வாய் நோய் ஏற்பட்டிருந் தது. அந்த நோய் அதே காலப் பகுதியில் பலாலி இராணுவ முகாமிலுள்ள மாடுகளுக்கும் தொற்றியுள்ளது. அதன் பின் னர் யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் அந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகா மில், அதிகாரிகளுக்குக் காண் பிக்கப்பட்ட 143 மாடுகளில் 60 மாடுகளுக்கு அந்த நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அந்த மாடுகளி லிருந்தே யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து வடக்கு மாகாண விவசாய அமைச்சினால், மத் திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 90 ஆயிரம் தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்தி யாழ்.மாவட்டத்தில் இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ் நாட்டி லிருந்து, பலாலி இராணுவ முகாமிலுள்ள மாடுகளுக்கு இந்த நோய்த் தொற்று சமகாலத் தில் ஏற்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக விவசாய அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கனகராயன் குளம் பகுதியில் மாடுகள் சில வற்றில் கால்வாய் நோய் இருப்பது கண்டறியப்பட்டுள் ளது. இதனைப் பரவாமல் தடுப்பதற்குரிய ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய மற் றும் கால்நடை அமைச்சு அதி காரிகள் தெரவித்தனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டா பாதுகாப்பு அமைச்சர் குழுவினர் நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு

## யாழ்.நூலகத்துக்கும் அவர்கள் பிரசன்னம்

யாழ்ப்பாணம்.ஜன.31

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள உகண்டா பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஓடங்கோ ஜேஜோவும் அவரது குழுவினரும் இலங்கை படை அதிகாரிகளுடன் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். அவர் கள் சிதறு தேங்காய் அடித்து முருகனை வழிபட்டனர்.

ஆலயத்தின் உட்பிரகாரத்துக்குச் செல்வதில் சில கட்டுப்பாடுகள் இருப்பது குறித்து அமைச்சருக்கும், குழுவினருக்கும் எடுத்துக் கூறப்பட்டது. அதை அடுத்து அவர்களிடம் இருந்து அர்ச்சனைத் தட்டுக்கள் ஆலயத்தினரால் பெறப்பட்டு விசேட பூசைகள் இடம்பெற்றபின் திரும்பக் கையளிக்கப்பட்டன. நல்லூர் ஆலயத்தின் தொன்மை மற்றும் சிறப்புக்கள் குறித்தும் அவர்களுக்கு விவரிக்கப்பட்டது.




நல்லூரானைத் தரிசிக்கச் சென்ற உகண்டா அமைச்சுக் குழுவினர்

அமைச்சர் ஓடங்கோ ஜேஜோவுடன் பிரதி பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சார்ள்ஸ் அங்கினா, பிரிகேடியர் ஜேம்ஸ் முஜிரா, பிரிகேடியர் ஜே.டபிள்யூ. ஜகோபா, பிரிகேடியர் ராமதன் ஜமுலேசிரே, மேஜர் சார்ள்ஸ் அரமுங், லெப்டினன் ஜோசெப் சமன்கா, உகண்டாவுக்கான இலங்கைத்தூதுவர் வீ.கணநாதன் ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இதேவேளை, உகண்டா அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் நேற்று யாழ். நூலகத்துக்கும் சென்றனர். அங்கு நடைபெறும் நட வடிக்கைகளை அவர்கள் நேரில் அவதானித்ததுடன், நூலக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினர். (ஒ-7-86)

### தென்மராட்சியில் 87 பேர் டெங்கால் பாதிப்பு



கோப்புப் படம்

தென்மராட்சி, ஜன.31

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் 87 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

பிரதேசத்தின் 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்கு நோயால் மக்கள் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் 56 பேர் வயிற்றோட்டத்தாலும், 32 பேர் உண்ணிக்காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டிருந்தனர் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (வ-9)

### கச்சதீவுக்கான படகுச்சேவை கட்டணம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.31

குறிகாட்டுவான்-கச்சதீவு படகுச் சேவைக்கான கட்டணம் குறித்து முடிவு எடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை நயினாதீவில் நடைபெறும் என்று வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் அறிவித்துள்ளார்.

கச்சதீவு உற்சவம் தொடர்பாக கடந்த 28 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு படகுக் கட்டணமாக ஒருவருக்கு ரூபா 250 [illegible]விடுவது என்று நயினாதீவு படகு உரிமையா ளர் சங்கம் கருத்துத் தெரிவித்த போதும் குறிப்பிட்ட தொகை அதிகமானது என கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து கட்டணம் தொடர்பாக வேலணை பிரதேச செயலர் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் படகு உரிமையாளர் கள், கடற்படையினர் கலந்து கொண்டு கட்டணம் குறித்த இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் வேலணை பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-7)

# வடக்கில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையில் இலங்கை மத்திய வங்கி


## அதன் பிராந்திய முகாமையாளர் குறிஞ்சிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

வடக்கில் பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதன் ஓர் அங்கமாக இங்குள்ள பாற்பண்ணையாளர்கள், அம்பேவல பாற்பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் வட பிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி, பால் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவடையவைக்கப் பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக இலங்கை மத்திய வங்கியால், பெரிய அளவிலான பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கான கடன் திட்டத்தை கடந்த வருடம் அறிமுகம் செய்திருந்தது.

இந்தக் கடன் திட்டத்தினூடாக ஆகக் கூடியது 25 மில்லியன் ரூபா வரையில் 8 வீத வட்டியுடன் பெற்றுக்கொள்ள முடியும்.



அம்பேவல பாற்பண்ணையைப் பார்வையிடும் வடக்கு பாற்பண்ணையாளர்கள்

இதன் மற்றொரு முயற்சியாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் காரியாலயத்தின் ஏற்பாட்டில், வடபகுதியைச் சேர்ந்த பாற்பண்ணையாளர்கள் அம்பேவல பாற்பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு கடந்த வார இறுதியில் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு தமது தொழிலை மேலும் விருத்தி செய்வதற்கான அறிவுரைகளும் செயல்முறை விளக்கங்களும், அம்பேவல உற்பத்தி நிறுவன அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

எனவே, இவ்வாறான பாற்பண்ணைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் இலங்கை மத்திய வங்கியின் வட மாகாணக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

# பொலிஸாரிடம் சிக்கியது மணல் ஏற்றிய டிப்பர்

தென்மராட்சி, ஜன.31

கேரதீவு அறுகுவெளி கடற்கரைப் பகுதியில் மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பிரகாரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

நேற்றுமுன்தினம் கேரதீவு அறுகுவெளிக் கடற்கரைப் பகுதியில் டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றுவதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸார் மணல் ஏற்றிய நிலையில் வாகனத்தை கைப்பற்றியதுடன் சாரதியையும் கைது செய்து அழைத்து வந்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாகனத்தில் ஏறிவர சக பொலிஸ் உத்தியோ கத்தர் மோட்டார் சைக்கிளில் வாகனத்துக்கு முன்பாகச் சென் றுள்ளார். இந்த வேளையில் வாகனச் சாரதி டிப்பரில் மணல் கொட்டக் கூடிய வகையில் செயற்பட்டதால் வாகனம் செல்லும்போது வீதியில் மணல் கொட்டியுள்ளது. பொலிஸ் நிலையத்தை வாகனம் வந்தடைந்தபோது அதில் அரைவாசி மணல் காணப்பட்டது.

தென்மராட்சி தெற்கு பிரதேச மக்கள் கட்டடத் தேவைகளுக்கு தமது பிரதேசத்திலிருந்து மணல் எடுக்காமல் வேறு இடங்களிலிருந்து மணல் பெற்று பயன்படுத்துவதாகவும், ஆனால் வேறு பிரதேசங்களிலிருந்து [illegible] ஏற்றிச் செல்வதை தடை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

# வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகையில் பெரியளவில் வீழ்ச்சி

## மத்தியவங்கியின் வட பிராந்திய முகாமையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.31

வடக்கில் போர் முடிவடைந்த பின்னர் வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகையின் அளவு அதிகரித்து வந்த நிலையில் கடந்த ஆண்டு அதில் பெரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்தார்.

வடக்கின் பொருளாதாரம் மற்றும் வங்கியியல் நிலைமைகள் கடந்த 2013 ஆம் ஆண்டில் எந்தளவில் இருந்தன என்பது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாணத்தில் புதிதாக வங்கிகளும் வங்கிக் கிளைகளும் திறக்கப்பட்டிருந்தன.

அந்த வங்கிகள் எல்லாவற்றாலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்ட கடன்களில் வருடா வருடம் அதிகரிப்பே ஏற்பட்டிருந்தது. கடந்த 2013 ஆம் ஆண்டில் வங்கிகள் வழங்கிய கடன்களில் பெரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்தாமையும் கடந்த ஆண்டே அதிகளவில் அதிகரித்துள்ளது. ஆனால் வைப்புக்கள் முன்னைய ஆண்டுகளில் அதிகரித்து வந்திருந்தாலும், கடந்த ஆண்டு அதில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று குறிஞ்சிதரன் மேலும் தெரிவித்தார். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்துக

***ஜெய்ப்பூர் நிறுவன உத்தியோகத்தர் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம்.ஜன.31

மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகுமுறையுடன் கூடிய வசதி வாய்ப்புக்களை பொது இடங்களில் ஏற்படுத்த வேண்டும். இதற்கு சமூக நிறுவனங்கள் உட்பட அரசதிணைக்களங்களும் முன் வர வேண்டும். இவ்வாறு அணுகு முறைகள் ஏற்படுத்தப்பட்டால் மாற்றுத்திறனாளிகள் தமது தேவைகளை மற்றவர்களில் தங்கி வாழாமல் தாமாகவே நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். இவ்வாறு யாழ். ஜெய்ப்பூர் நிறுவன உத்தியோகத்தர் எஸ். பிருந்தாபன் தெரிவித்தார்.



*மாற்றுத்திறனாளி களின் தேவைகளை க் கேட்டறிந்தபோது.*

கிளிநொச்சி குடும்பப் புனர்வாழ்வு நிறுவனம் மற்றும் கொழும்பு ஊனமுற்றோர் அமைப்பின் ஒன்றிணைந்த முன்னணி ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் மாற்று வலுவுடையவர்களுக்கான வலுவூட்டும் இரண்டுநாள் செயலமர்வு கடந்த 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கிளிநொச்சி சோலைவனம் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் வளவாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாற்றுத்திறனாளிகளுக்கு சமத்துவமான கல்வி மற்றும் தொடர்பாடல் வசதிகள் அவசியமானதாகும். தங்களிடம் இருக்கக் கூடிய திறமைகளை சமூகத்துக்குப் பயந்து அவற்றை வெளிப்படுத்த தயங்குகின்றனர். குறிப்பாக வேறொருவரிடம் தங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் எனப் பயந்து திறமைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு விடுகின்றனர்.

மாற்றுத்திறனாளிகளை வேறு பார்வையில் நோக்காமல் எம்மில் ஒருவராக நினைத்து அவர்களது திறமைகளுக்கு ஊக்குவிப்பு வழங்க வேண்டும். முக்கியமாக பொது இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகுமுறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இந்தச் செயலமர்வில் 20 இற்கும்மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர். (க-14)

## சட்டமாணி தெரிவுப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தப்படும் சட்டமாணி பட்டக் கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைகள் பின்வரும் மண்டபங்களில் இடம் பெறவுள்ளது என யாழ். பிராந்திய உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபம், கலைப்பீட மண்டபம், புதிய கலைப்பீட மண்டபம், முகாமைத்துவ மண்டபம் I,II மற்றும் இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலைய பரீட்சை மண்டபங்கள் என்பவற்றில் இப் பரீட்சை இடம் பெறும். (த-400)

## இரு விபத்துகளில் இருவர் காயம்

யாழ்ப்பாணம். ஜன.31

யாழ். முற்றவெளியில் பிரதம தபாலகச் சுற்றுவட்டப் பகுதியில் நேற்று மாலை அடுத்தடுத்து இரண்டு விபத்துக்கள் இடம் பெற்றன. நேற்று மாலை 6 மணியளவில் இந்த வீதியூடாக சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த பெண் ஒருவரின் கால் சில்லுக்குள் அகப்பட்டதில் அவர் விழுந்து காயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேவேளை மாலை 6.45 மணியளவில் அதே இடத்தில் மோட்டார்சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த பெண் ஒருவரின் சேலை சில்லுக்குள் அகப்பட்டதில் அவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். (த-17)

## புனரமைக்கப்படாத நீர்ப்பாசன வீதிகள்

முல்லைத்தீவு. ஜன.31

முல்லைத்தீவு மாவிட்டத்திலுள்ள வவுனிக்குளத்தின் கீழ் உள்ள 100 கிலோமீற்றர் நீளத்துக்கும் அதிகமான வீதிகள் புனரமைக்கப்படாமலும், அழிவடைந்த நிலையிலும் காணப்படுவதாக இந்தப் பகுதியின் விவசாய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

**100 கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட நீர்ப்பாசன வீதிகள் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன.**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் 600 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நீர்ப்பாசன வீதிகள்புனரமைக்கப்படாமையால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகளும், விவசாய அமைப்புக்களும் கவலை தெரிவிக்கின்றன. மேலும் அவற்றை விரைவில் புனரமைத்து வழங்குமாறும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில் வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

குளத்தினதும் நீர் விநியோக வாய்க்காலினதும் புனரமைப்பு பணிகள் 600 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு 95 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. ஆனால் 100 கிலோமீற்றருக்கும் மேற்பட்ட நீர்ப்பாசன வீதிகள் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கு மேலதிக நிதி தேவைப்படுகின்றது. இருந்தபோதிலும் பாண்டியன்குளம் பத்தாம் வாய்க்கால் வீதியும் யோகபுரம் கரும்புள்ளியான் வீதியும் புனரமைக்கப்பட்டு பாலியாற்றுக்கான பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அனுமதிக்கப்படும் திட்டங்களினூடாக ஏனைய வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத்துக்கு 4 படகுகள்

யாழ்ப்பாணம். ஜன.31

ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் நான்கு படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப்படகுகளை இலங்கைக்கான நோர்வே பிரதித் தூதுவர், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர்.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 10 மீனவர்களுக்கு வலைகளும் வழங்கப்பட்டன. இந்தப் படகுகளை வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மீனவர்கள் வாடகை அடிப்படையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## ஏ-9வீதியில் விபத்து இருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஜன 31

ஏ-9 வீதியில் புத்தூர் சந்திக்கு அண்மையில் நேற்று இரவு 7மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த மரியதாஸ் மயூரன் (வயது-38), மீசாலை மேற்கை சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் (வயது-58) ஆகிய இருவருமே இந்த விபத்தில் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த மயூரன் என்பவர் கிளிநொச்சியில் உள்ள தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துள்ளார். இதன்போது அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஏ-9 வீதி புத்தூர் சந்திப் பகுதிக்கு அண்மையில் வீதியைக் கடக்க முற்பட்ட மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## இந்தியக் குழுவினர் வன்னிக்கு பயணம்

இந்திய நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியக் குழுவினர் நேற்று வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளுக்குச் சென்று இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா தலைமையில் வருகை தந்த இந்தக் குழு, வவுனியா புதுக்குளத்தில் அமைக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டங்களைப் பார்வையிட்டது.

இதனையடுத்து வவுனியா புதுக்குளம் கிராமசேவகர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்தைப் பெற்ற பயனாளிகளை சாஸ்திரி கூழாங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் குழுவில் இந்தியத் துணைத் தூதரகத்தின்துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், வெளிவிவாகார அமைச்சின் மேலதிக செயலாளர் பினய் குமார், வெளிவிவகார அமைச்சின் நிதி இயக்குநர் அனுராக் சிறிவஸ்ராவா, வெளிவிவாகார அமைச்சின் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் மாய் ஆகியோர் அடங்கியிருந்தனர். கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்ற இந்தக் குழுவினர் அங்கு இடம்பெறும் இந்திய வீட்டுத்திட்டப் பணிகளைப் பார்வையிட்டதுடன் பெரியபுரம் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட 97 வீடுகளில் 4 வீடுகளைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழவில் கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் சு.கேதீஸவரன், கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-400 -18)

## மரங்களைப் பாதுகாக்க கடுமையான நடவடிக்கை

*கூறுகிறார் பூநகரி பிரதேச செயலர்*

பூநகரிப் பிரதேசத்தில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் அவற்றைப் பாதுகாக்க கடுமையான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வீட்டுத் திட்டங்களுக்காக மரங்களை அழிப் போமானால் பூநகரிப் பிரதேசம் பெரும் சூழலியல் ஆபத்தை எதிர்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். பூநகரிப் பிரதேசம் உவர் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதன் காரணமாக மரங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஜெயபுரம், முக்கொம்பன், கரி யாலை, நாகபடுவான் பகுதிகளில் பெருமளவு மரங்கள் மீள் குடியமர்வின் பின்னர் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம். ஜன.31

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய் வன்மைப் போட்டிகளை முன்னிட்டு நடத்தப்படும் 5 கிலோ மீற்றர் ஆண், பெண்களுக்கான மரதனோட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு வித்தியாலய முன்றலில் இருந்து ஆரம்பமாக உள்ளதாக அதிபர் [illegible] அறிவித்துள்ளார். (த-400)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**செல்வி. கிருத்திகா மகேந்திரன்**
(க.பொ.த.உயர்தர கலைப்பிரிவு 2013 ம் ஆண்டு பரீட்சையில்)

மாவட்ட மட்டம் - முதல் நிலையை பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்தமையயிட்டு அக மகிழ்ந்து வாழ்த்துவதுடன் இரண்டாவது தடவையும் எமது பாடசாலை மாணவர்கள் க.பொ.த , உ/த கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையை பெற்றமையை பாராட்டுகின்றோம்.

பாடசாலை சமூகம்
கிளி / உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

## மரண அறிவித்தல்

**திருமதி இரத்தினசிங்கம் ஞானேஸ்வரி**



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் ஞானேஸ்வரி நேற்று (30.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசிங்கத்தின் மனைவியும் சுப்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும் பொன்னுத்துரை - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் சுதர்சினி (குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை ), நவநீதன் (Vet World பிறைவேட் லிமிட்டட்) ஆகியோரின் அன்புத்தாயும் கணேசதாஸ் (செந்தோமஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை), சுயந்தினி (செலிங்கோ லைவ்) ஆகியோரின் மாமியும் அனந்திகா, அங்கவி, ஆகாஸ் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் மகேஸ்வரி, புஸ்பராசமலர், லலிதா, வரதராஜன் ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக நண்பகல் 12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவநீதன் (மகன்)
முத்தட்டி மடலேன், கோண்டாவில் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரமமடையும் நோயாளர்கள்

நவாலி, ஜன.31
மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவமனை தற்போது ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் மூடப்பட்டுள்ளதால் அங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த வருடம் குறித்த மருத்துவமனை விடுமுறை தினங்களில் காலை 8 முதல் முற்பகல் 11 மணி வரை இயங்கி வந்ததால் பாடசாலைப் பிள்ளைகள், அரச ஊழியர்கள் எனப் பலரும் சிகிச்சை பெற்று பயன் அடைந்து வந்தனர்.
இந்த வருடம் விடுமுறை தினங்களில் பணிபுரிவதற்கு மேலதிக கொடுப்பனவுக்கு நிதி இல்லையென்று சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளதால் மருத்துவமனையின் விடுமுறைச் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

# உ.கிழங்கு கொள்வனவுக்கு 'சதொச' தயார்

## நாளை முதல் ஆரம்பம்

அச்சுவேலி.ஜன.31
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்த உருளைக்கிழங்கை 'சதொச' நிறுவனம் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது. கிலோ ஒன்று 65 ரூபா விலையில் மூடைக்கழிவுகள் எதுவும் இன்றி விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று கொள்வனவு செய்வதோடு அவற்றுக்கான கொடுப்பனவுகளும் உடனடியாக வழங்கப்படவுள் ளன. நாளை சனிக்கிழமை தொடக்கம் கொள்வனவு நடைபெறவுள்ளதாக உருளைக் கிழங்கு கொள்வனவுக்கான சதொச நிறுவனத்தின் இணைப் பாளர் தேவராசா இராஜ்குமார் தெரிவித்தார்.
யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு கொள்வனவு தொடர்பான விடயம் மற்றும் விலை நிலைவரம் தொடர்பாக நேற்றுமுன்தினம் விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையை விவசாய சம்மேளன நிர்வாகிகளும் உறுதி செய்தனர்.
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக் கிழங்கை கிலோ ஒன்று 70 ரூபா விலைக்கு கொள்வனவு செய்வதற்கு சதொச நிறுவன அதிகாரிகள் விருப்பம் தெரிவித்ததோடு கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் கிழங்கை கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.
எனினும் குறித்த அறிவிப்பின் பிரகாரம் உருளைக்கிழங்கு கொள்வனவு செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்திருந்தனர்.


கோப்புப் படம்

உருளைக்கிழங்கின் தேசிய சந்தை விலை நிலவரம் 50-55 ரூபாவாக கிலோ இருந்ததோடு யாழ்.மாவட்ட விவசாயிகள் உரிய முதிர்வு நிலைக்கு முன்னரே கிழங்கை அறுவடை செய்வதால் கிழங்கின் மேல்தோல் அகற்றப்படுவதோடு குறிப்பிட்ட தினங்களுக்கு மேல் கிழங்கை களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியாது. அவை அழுகிச் சேதம் அடைவதாகவும் தெரிவித்தே சதொச நிறுவனத்தின் மேலிடம் யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கை கொள்வனவு செய்வதற்கு தயக்கம் காட்டியது.
யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கின் விற்பனையில் ஏற்படக்கூடிய பாதிப்பை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்கள ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் மற்றும் உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாகிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து சதொச நிறுவனம் மீண்டும் உருளைக் கிழங்கை கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ளது.
"தினமும் 15 ஆயிரம் கிலோ வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. உருளைக்கிழங்கு நடுகைக் கால அடிப்படையில் அறுவடை செய்யப்படவுள்ளது. அது தொடர்பான கால அட்டவணையை சமாசம் தயார் செய்துள்ளது. கொள்வனவு நடவடிக்கை கோப்பாய் பிரதேசத்தில் ஆரம்பமாகவுள்ளது"என சதொச நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார்.
இதேவேளை "உருளைக் கிழங்கு கொள்வனவு காலச் சூழலுக்கு ஏற்ப சனிக்கிழமைக்கு முன்னரும் ஆரம்பிக்கலாம்" என கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-11)

# நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.31
தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயங்கும் நீரிழிவு சிகிச்சை நிலையப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகின்றது.
குறித்த நிலையத்தால் கடந்த வருடம் தென்மராட்சி பிரதேச கிராமங்களில் மாதாந்தம் நடத்தப்பட்ட நீரிழிவு பரிசோதனை முகாம்களில் பெறப்பட்ட பரிசோதனைகள் மூலம் இந்த விவரம் கண்டறியப்பட்டுள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் வரணியில் நடத்திய பரிசோதனை முகாமில் ஆறு பேரும், மார்ச் மாதம் மட்டுவிலில் 9 பேரும், மே மாதம் நாவற்குழியில் நால்வரும், ஜூன் மாதம் கொடிகாமத்தில் ஐந்து பேரும், செப்ரெம்பர் மாதம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 7 பேரும் நீரிழிவால் பீடிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டுள்ளது.
தென்மராட்சி பிரதேச மக்கள் விவசாயம் உட்பட பல்வேறு தொழில்களில் கடின உழைப்பாளிகளாக உள்ள போதிலும் நீரிழிவு நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்தமைக்குக் காரணம் என்ன என்பது புரியாத புதிராக உள்ளது.
உணவுப் பழக்க மாற்றமா? அல்லது நீரிழிவு நோயை உரு வாக்கக் கூடிய நச்சுப் பதார்த் தங்களைக் கொண்ட உணவு மற்றும் நீரால் ஏற்பட்டவையா எனக் கண்டறிய வேண்டியது அவசியமெனக் கருதப் படுகிறது. லண்டனில் வாழும் தென்ம ராட்சிப் பிரதேச வாசிகள் வைத்தியசாலை வளாகத்தில் நீரிழிவு சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து அதன் செயற் பாட்டுக்கு பல் வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.
கடந்த வருடம் இந்த நிலையத்தில் 281 பேருக்கு நீரிழிவு தொடர்பான கண் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள் ளது. குறித்த நிலையத்தில் நடத்தப்பட்ட முழு மருத்துவ பரிசோதனைகளில் நீரிழிவு நோயின் ஆரம்பக் கட்ட நிலையில் இருப் பவர்கள் இனங்காணப் பட்டு தேவை யான மருத்துவ சேவை கள் வழங்கப்பட்டு வருகின்றன.
இந்த வருடமும் இவ்வாறான சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடத்தப்படும் சுகவாழ்வுக் கிளினிக்கில் உடல் பருமன், இரத்த அழுத்தம், இரத்தத்தில் சீனியின் அளவு, கொலஸ்ரோல், பல், கண் போன்ற பரிசோதனைகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.
இந்தக் கிளினிக்கில் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொண்டு நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறி விக்கப்பட்டுள்ளது. (வ-9)

# பணம் வாங்கியமையால் வேலை இழந்த ஊழியர்கள்

## வாகனப் புகைப் பரிசோதனை நிலையத்தில்

வலி. வடக்கு. ஜன .31
சுன்னாகம் பகுதியில் உள்ள வாகனங்களை புகைப் பரிசோதனை மேற்கொள்ளும் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற மோசடி உய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கு கடமையாற்றும் இருவர் விசார்ணையின் பின்னர் நிறுவனத்தில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.
குறித்த வாகன புகைப் பரிசோதனை மேற்கொள்ளும் நிலையத்தில் மோட்டார் சைக்கிளை பரிசோதனை செய்ய அரச ஊழியர் ஒருவர் சென்றுள்ளார். அவருடைய வாகனத்தைப் பரிசோதனை செய்த ஊழியர்கள் வாகனத்தில் பிழை இருப்பதாகக் கூறி குறிப்பிட்ட வாகனம் புகைப் பரிசோதனையில் சித்தியடையவில்லை என்ற சான்றிதழை வழங்கியுள்ளனர்.
சான்றிதழை பெற்ற அரச ஊழியர் வாகனத்தை எடுத்துக் கொண்டு திருத்[illegible]வதற்குச் செல்வதாக புறப்பட்டுள்ளார்.
இந்தவேளையில் குறித்த மற்றும் ஓர் ஊழியர் வந்து தாம் அதனைச் செய்து தருவதாகக் கூறி 450 ரூபா பணம் தருமாறு கூறிப் பணத்தையும் பெற்றுள்ளார்.
சற்று நேரத்தில் மீண்டும் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள் மீண்டும் எந்த வகையான திருத்தமோ அன்றி மாற்று நடவடிக்கைகளோ செய்யப்படாத நிலையில் மீண்டும் புகைப் பரிசோதனை செய்யப்பட்டு அதில் சித்தி அடைந்ததாகவும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
அதனைத் தொடர்ந்து குறித்த நிறுவனத்தின் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் நண்பகல் கொழும் பில் இருந்து வந்த அதிகாரி களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து பெறப்பட்ட பணம் உரியவரிடம் மீளப் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட இருவரும் இடைநிறுத்தப்பட்டும் உள்ளனர்.
ஏற்கெனவே வாகனங்களை புகைப்பரிசோதனை செய்யும் நிலையங்களில் உள்ள ஊழியர்கள் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு வரு கின்றமை தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளிலும் பொது மக்களால் முறையிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

# மகாத்மா காந்தியின் சிரார்த்த தின நிகழ்வில்




யாழ்ப்பாணம்.ஜன.31
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் மகாத்மா காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்ததினம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் தி.இராசநாயகம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு தலைவர் தி.இராசநாயகம் மலர் மாலை அணிவித்தார். நிகழ்வில் கலந்துகொண்டோர் அருகில் நிற்கின்றனர். (வ-20-21)

# போதையால் வந்தது வினை; அபராதம் ரூபா 21, 500

தென்மராட்சி, ஜன.31
மது போதையுடனும் ஆவணங்கள் இன்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை 21 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வாகனவரிப் பத்திரம், சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், தலைக்கவசம் ஆகியவை இன்றியும் மதுபோதையிலும் வாகனம் செலுத்தியதாக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஐந்து குற்றங்களுக்குமாக 21 ஆயி ரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# குப்பைத் தொட்டிகளை ஏற்றிச் சென்ற இரும்பு வியாபாரிகள்

## கையும் களவுமாக மாட்டினார்

தென்மராட்சி.ஜன.31
சாவகச்சேரி நகரசபையால் பொது மக்கள் கழிவுகளைப் போடுவதற்காக வீதி ஓரங்களில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிகளை இரும்பு வியாபாரி வாகனத்தில் ஏற்றிச் சென்ற வேளையில் நகர சபை பொது சுகாதாரப் பரிசோதகரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அத்துடன் இரு தினங்களுக்கு முன்னர் திருட்டுப் போன குப்பைத் தொட்டி பழைய இரும்பு கொள்வனவு நிலையத்திலிருந்து மீட்கப்பட்டது.
சாவகச்சேரி நகரசபையின் திண்மக் கழிவு முகாமைத் [illegible] ச்சேரி நகரப் பகுதியிலும் வட்டாரங்களில் பொது இடங்களிலும் தகரத்திலான குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.
இரு தினங்களுக்கு முன்னர் ஒரு குப்பைத் தொட்டி காணாமற் போயிருந்தது. நேற்று பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொது சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் மோட்டார் சைக்கிளில் சென்ற போது வடி வாகனத்தில் குப்பைத் தொட்டிகளை ஏற்றிக்கொண்டு சென்ற நிலையில் கையும் மெய்யுமாகப் பிடித்தார். வாகனத்தையும் நபரையும் நகர சபைக்கு அழைத்து வந்து விசாரித்த போது இரு தினங்களுக்கு முன்னர் குப்பைத் தொட்டியை எடுத்துச் சென்றதை [illegible] டன் அது [illegible] ள்ள இடத்தையும் தெரிவித்தார்.
நகரசபைச் செயலாளர் மற்றும் ஊழியர்களுட : சென்ற போது குப்பைத் தொட்டி அடித்து நிமித்தப்பட்டு வாக னத்தில் ஏற்றத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.
குறித்த நபர் மன்னிப்புக் கோரியதை அடுத்து விடுவிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



ஏற்றிச்செல்லப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட குப்பைத்தொட்டி

இதேவேளை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை அழகுற வைத்திருப்பதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அந் தந்தப் பிரிவு மக்களின் பொறுப்பு என்று நகர சபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளைதெரிவித்தார். (வ-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி.மு.க வில் இருந்து மு.க.அழகிரி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று அவரது பிறந்த தினத்தை மதுரையில் கோலாகலமாகக் கொண்டாடியுள்ளனர் அவரது ஆதரவாளர்கள். வழக்கமாக அவருடைய பிறந்த நாள் விழாவை உற்சாகத்துடன் தொண்டர்கள் கொண்டாடுவர். ஆனால் இம்முறை அவருடைய பிறந்த நாள் கொண்டாட்டங்கள் ஒரு போட்டி மனப்பான்மையுடன் வலிமையைக் காட்டும் வகையிலும், தி.மு.க. தலைமை மீதான அதிருப்தியாளர்களை ஒருங்கிணைக்கும் வகையிலும் திட்டமிடப்பட்டதால், அழகிரி ஆதரவாளர்களால் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. பிறந்தநாள் கொண்டாட்டங்களின்போது கருத்துத் தெரிவித்த அழகிரி, தனது கோரிக்கைகளை தி.மு.க. சாதகமாகப் பரிசீலித்தால் அந்தக் கட்சியுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார். (ற)

## மத்திய அரசின் கொள்கை தமிழகத்துக்குப் பாதிப்பு

### குற்றஞ்சாட்டுகின்றார் ஆளுநர் ரோசையா



சட்டசபைக் கூட்டத்தை ஆரம்பித்து தமிழக ஆளுநர் ரோசையா உரையாற்றுகின்றார்.

சென்னை, ஜன.31

இந்திய மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் தமிழகத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஆளுநர் ரோசையா.

நடப்பு ஆண்டில் தமிழக சட்டசபையின் முதல் கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலக பொருளாதார நெருக்கடியின் பாதிப்பை மத்திய அரசின் தவறான கொள்கைகள் அதிகப்படுத்திவிட்டன. விவசாயிகள், அடித்தட்டு மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும், மின் பற்றாக்குறையை சமாளிக்கவும் தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளும் பாராட்டுக்குரியவை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழக மீனவர் நலன் பாதுகாப்பு போன்ற விவகாரங்களில் முதலமைச்சர் ஜெயலலிதா சிறப்புக் கவனம் எடுத்துக் கொண்டு செயற்பட்டுள்ளார். அதேபோன்று காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை செயற்படுத்துவதிலும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் தமிழக அரசு முனைப்புடன் செயற்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆளுநரின் உரை ஏமாற்றம் தருகின்றது

சென்னை, ஜன.31

தமிழக ஆளுநர் சட்டசபையில் ஆற்றிய உரை ஏமாற்றம் அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

"தமிழ்நாடு சட்ட சபையில் ஆளுநர் ஆற்றிய உரை அவரது முந்தைய இரண்டு உரைகளின் நகலைப் போன்றுதான் இருக்கின்றது. மாநிலம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக ஆளுநர் உரையில் தெரிவித்திருப்பது நல்ல நகைச்சுவை.

வேலைவாய்ப்புகள் உருவாக்கும் புதிய திட்டங்கள் எதுவும் கடந்த இரண்டரை ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்படவில்லை. முன்பு அறிவிக்கப்பட்ட இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சித் திட்டம் நடைமுறைக்கு வரவில்லை.

தமிழ்நாடு முழுவதும் மதுபானக் கடைகளை மூட வலியுறுத்தி மக்கள் குறிப்பாக தாய்மார்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவது குறித்து ஆளுநர் உரையில் எந்த அறிவிப்பும் இல்லை." என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# தெலுங்கானாவுக்கு ஆந்திராவில் எதிர்ப்பு

### சட்டசபையில் சட்டத்திருத்தம் தோல்வி

புதுடில்லி, ஜன.31

தெலுங்கானா சட்டத்திருத்தம் தொடர்பாக வாக்கெடுப்பு ஆந்திர மாநில சட்ட சபையில் தோல்வியடைந்தது. அதையடுத்து தனி தெலுங்கானா விவகாரத்தில் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தெலுங்கானா மாநில சட்டத் திருத்தம் குறித்து விவாதிக்க ஆந்திர சட்ட சபைக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள்சட்டத்திருத்தம் மீது விவாதம் நடத்தி முடிவை அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார். அதன் அடிப்படையில் நேற்றுக் காலை சட்டசபை ஆரம்பித்ததுமே தெலுங்கானா மற்றும் சீமாந்திரா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.



ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி

மத்திய அரசின் முடிவைத் தொடர்ந்து எதிர்த்து வரும் முதலமைச்சர் கிரண்குமார் ஏற்கனவே அறிவித்தபடி சட்டத் திருத்தத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

பின்னர், குரல் வாக்கெடுப்பு மூலம் ஆந்திர மாநில மறுசீரமைப்பு சட்டத் திருத்தத்தை நிராகரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அறிவித்த சபா நாயகர், சட்டசபையை கால வரையறையின்றி ஒத்திவைத்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடங்கவுள்ள நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில், தெலுங்கானா மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக எதிர்வரும் 4ஆம் திகதி தெலுங்கானா மாநிலம் வரையறை தொடர்பான மத்திய அமைச்சர்கள் குழு கூட்டம், உள்துறை அமைச்சர் ஷிண்டே தலைமையில் நடைபெறவுள்ளது. அதில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான தெலுங்கானா மசோதாவின் இறுதிக் குறிப்பு தயார் செய்யப்படும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. தனித் தெலுங்கானா சட்டத்திருத்தத்தை ஆந்திர மாநில சட்ட சபை நிரா கரித்ததால் இவ்விவகாரத்தில் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ற)

## அழகிரியை நிரந்தரமாக நீக்க தி.மு.க. தலைமை தீர்மானம்?

சென்னை, ஜன.31

தி.மு.கவில் இருந்து அழகிரியை நிரந்தரமாக நீக்குவதற்கு கட்சித் தலைமை முடிவெடுத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அழகிரியை நிரந்தரமாகக் கட்சியில் இருந்து நீக்குவது தொடர்பாக விளக்கம் கேட்டு அவருக்கு கடிதம் அனுப்பவும் கட்சி முடிவெடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த வாரம் தி.மு.கவில் இருந்து மு.க.அழகிரி தற்காலிகமாக நீக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த மு.க. அழகிரி, தி.மு.கவில் உள்கட்சி ஜனநாயகம் இல்லை என்று விமர்சித்திருந்தார். தனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று அறிவிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

அழகிரியின் இந்த நடவடிக்கை தி.மு.கவின் மூத்த தலைவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதையடுத்தே அழகிரியிடம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. அந்தக் கடிதத்துக்கு ஒரு வாரத்துக்குள் பதில் அளிக்கும்படி அழகிரிக்கு நிபந்தனை விதிக்கப்படும் என்றும் தெரிகிறது.

ஒரு வாரத்துக்குள் அழகிரி பதில் அளிக்கும் பட்சத்தில் அவரது விளக்கத்தை ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இல்லையெனில் அழகிரி தி.மு.கவில் இருந்து நிரந்தரமாக நீக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

தி.மு.க. மேலிடத்தின் இந்த முடிவு மு.க.அழகிரி ஆதரவாளர்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## வைகோ- ராஜ்நாத் சந்திப்பு கூட்டணி குறித்துப் பேச்சு

புதுடில்லி, ஜன.31

புதுடில்லி சென்றுள்ள ம.தி.மு.க. தலைவர் வைகோ அங்கு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

தமிழகத்தில் பா.ஜ.க கூட்டணியில் ம.தி.மு.க இடம் பெறுவது உறுதியாகியுள்ளது. வைகோ தலைமையிலான குழுவும், பொன் ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவும் இரண்டு முறை தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டன.

ஆனால் ம.தி.மு.க.வுக்கு எத்தனை தொகுதிகள் வழங்கப்படும் என்பது குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தநிலையிலேயே புதுடில்லி சென்றுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ பா.ஜ.க. தேசிய தலைவர் ராஜ்நாத்தைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். அந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பாக இருவரும் ஆலோசனை நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது. (ற)

## ராஜீவ் கொலை வழக்கு: மனுதாரர் தரப்பு வாதம் முடிந்தது

சென்னை, ஜன.31

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரும் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரின் தரப்பு வாதம் உயர் நீதிமன்றத்தில் முடிவடைந்துள்ளது. இந்திய மத்திய அரச தரப்பு வாதத்துக்காக வழக்கு விசாரணையை பெப்ரவரி 4ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது நீதிமன்றம்.

கருணை மனு மீதான முடிவு எடுப்பதில் காலதாமதம் செய்யப்பட்டதால் வீரப்பன் கூட்டாளிகள் நால்வர் உட்பட 15 பேரின் தூக்கு தண்டனையை உயர் நீதிமன்றம் அண்மையில் இரத்து செய்தது. அதைத் தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரும் தங்களது தூக்கு தண்டனையை இரத்து செய்யுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது. மனுதாரர் தரப்பில் முன்னிலையான மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி, தனது தூக்கு தண்டனையை இரத்துச் செய்யக் கோரி முருகன் கடந்த 2000ஆம் ஆண்டு கருணை மனு அளித்ததை நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டினார். அத்துடன் முருகனின் கருணை மனு உள்துறை அமைச்சகத்தில் 5 வருடமும், குடியரசு தலைவர் மாளிகையில் 5 வருடம் 8 மாதமும் நிலுவையில் இருந்ததை குறிப்பிட்டதுடன், தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்ட பின்னர் 16 ஆண்டு காலம் முருகன் சிறையில் கழித்துள்ளார் என்றும் வாதிட்டார்.

அதே போன்று சாந்தன் மற்றும் பேரறிவாளன் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் யுக்முக் சவுத்ரி, அவர்கள் இருவர் சார்பிலும் கருணை மனு அளிக்கப்பட்ட நேரத்தில், பிற கருணை மனுக்கள் மீது விரைவில் முடிவெடுக்கப்பட்டது என்று குற்றம் சாட்டினார். கருணை மனு மீதான தாமதத்துக்கு இந்திய மத்திய அரசு எந்தவித நியாயமான வாதங்களையும் முன்வைக்க முடியாது என்று வாதிட்ட அவர், அவர்களுக்கான தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். வாதங்களைக் கேட்ட நீதிபதிகள் எதிர்வரும் பெப்ர வரி 4ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்தனர். அன்றைய தினம் மத்திய அரசு தரப்பு வாதம் ஆரம்பமாகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொரிய தீபகற்பத்தில் பதற்றம் ஏற்படுவதற்கு தென்கொரியாவே காரணம் என்று வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. தென் கொரியாவும், அமெரிக்காவும் கூட்டுப்போர் பயிற்சி மேற்கொள்வதே பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் என்று வடகொரியா கூறியுள்ளது. தமது அணுசக்தி திட்டங்கள் குறித்து எதுவும் தெரியாமல் தென்கொரியா அச்சம் கொண்டிருக்கின்றது. அதை அமெரிக்கா சாதகமாகப் பயன்படுத்துகின்றது என்றும் வடகொரியா கூறியுள்ளது. (படம்:தென்கொரிய எல்லையில் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளும் அமெரிக்கத் துருப்பினர்). (ற)

## ஷூமேக்கரின் உடல்நிலை முன்னேற்றம்



ஷூமேக்கர்

பாரிஸ், ஜன.31
பிரபல கார்ப்பந்தய வீரர் மைக்கேல் ஷூமேக்கரின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

கார்ப்பந்தய போட்டிகளில் தனக்கென்று தனி இடத்தை பிடித்து பல வெற்றியை நிலை நாட்டியவர் ஜேர்மனியை சேர்ந்த 44 வயதுடைய மைக்கேல் ஷூமேக்கர்.

இவர் கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி. ஆல்ப்ஸ் மலையில் பனிச்சறுக்கு விளையாட்டில் கலந்து கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து. தலையில் பலத்த காயமடைந்தார். அதையடுத்து அவர் நினைவிழந்த நிலையில் கிரீனோபிலில் உள்ள மருத்துவமனையில் 24 மணிநேர மருத்துவ கண்காணிப்பில் இருந்து வந்தார்.

இதுநாள் வரை கோமா நிலையில் இருந்த அவரின் உடலில் தற்போது சிறு அசைவுகள் காணப்படுகின்றன என்று மருத்துவனை வட்டாரங்களை மேற்கோள் காட்டி பிரான்ஸ் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்தத் தகவல்களை ஷூமேக்கரின் உதவியாளர் மறுக்கவோ. உறுதி செய்யவோ மறுத்து விட்டார் என்றும் அவை கூறுகின்றன. (ற)


# சிரிய அமைதிப் பேச்சில் முன்னேற்றம் இல்லை

ஜெனிவா, ஜன.31
சிரியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற பேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி லக்தார் ப்ராஹிமி.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தப் பேச்சுக்களின் மூலம் எந்தத் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தப் பேச்சுக்கள் இன்றுடன் முடிவடையவுள்ளன. எந்தவிதமான முன்னேற்றமான முடிவும் இந்தப் பேச்சுக்களில் எட்டப்படவில்லை.

எனினும் அதுகுறித்து நான் கவலைப் படவில்லை. முடிவுகள் எடுக்கப்படாது விட்டாலும் இந்தகைய பேச்சுக்கள் இறுக்கமான நிலைமையை இலகுவாக்குகின்றன. எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பாக இருதரப்பும் வரவேற்கத்தக்க முடிவுகளை எடுப்பார்கள் என்று நம்புகின்றோம். சமாதான முன்னெடுப்புகள் தொடர்ந்தும் நடைபெறும்" என்று தெரிவித்துள்ளார். (ற)



சிரிய வெளிவிவகார அமைச்சர் ஓமர் அல்-ஷக்பீர் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கின்றார்.

## பெருவில் வெள்ளப் பெருக்கு; ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

லண்டன், ஜன.31
பெருவின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 ஆயிரம் வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளப் பெருக்கில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் அருகே உள்ள பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கரையோரங்களில் வாழும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறும் பெரு அரசு அறிவுறுத்தியுள்ளது. (ற)

## போராட்டக்காரர்களுக்கு பொதுமன்னிப்பு

*உக்ரைன் நாடாளுமன்றில் சட்டத்திருத்தம் நிறைவேற்றம்*

லண்டன், ஜன.31
உக்ரைனில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் சட்டத்திருத்தம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் எதிர்வரும் 15 நாள்களுக்குள் போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையும் விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கியதில் இருந்து இதுவரை 200க்கும் மேற்பட்டோர் அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (ற)

# ஸ்நோடனின் பெயர் நோபல் பரிசுக்குப் பரிந்துரை

மொஸ்கோ, ஜன.31
அமெரிக்காவின் ரகசிய உளவு நடவடிக்கைகளை அம்பலப் படுத்திய எட்வேர்ட் ஸ்நோடனின் பெயர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுவீடன் சமூகவியல் பேராசிரியர் ஸ்டீபன் ஸ்வால்ஃபோர்ஸ் நோர்வே நோபல் பரிசுக் குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

"பிற நாடுகளையும் அவற்றின் மக்களையும் அமெரிக்க அரசு ரகசியமாகக் கண்காணித்ததை அம்பலப்படுத்தியதில் எட்வேர்ட் ஸ்நோடன் பெரும் பங்காற்றியுள்ளார். உலகில் என்ன நடக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிய அவரது பங்களிப்பு மக்களிடையே விவாதத்தைத் தூண்டியுள்ளது.

அவரது பங்களிப்பின் அடிப்படை சாராம்சம் அமைதியை மேம்படுத்துவதாக உள்ளது. ஸ்நோடனின் நடவடிக்கைகள், உலகப் பாதுகாப்புக் கொள்கைகளுக்கான புதிய நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு வழி வகுத்துள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ஸ்டீபன் ஸ்வால்ஃபோர்ஸ் கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஸ்நோடெனின் பெயரை நோபல் பரிசுக்கு பரிந்துரைத்திருந்தார். 2014 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு பெறத் தகுதியுள்ளோர் பெயர்களைப் பரிந்துரைக்கும் இறுதித்தினம் நாளையாகும்.



எட்வேர்ட் ஸ்நோடன்

அதையடுத்தே அவர் மீண்டும் ஸ்நோடனின் பெயரை பரிந்துரைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைக் கட்டடத் தொகுதி திறந்து வைப்பு

முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் யுனிசெப் நிறுவனத்தின் மேற்பார்வையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் றோபின் மோடி மற்றும் யுனிசெப் இன் இலங்கைக்கான பிரதிநிதி செல்வி உனா மைக்கோலின் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. செல்வராசா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம். இராஜகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர். (க-433)

## மெய்வன்மைப்போட்டி

தென்மராட்சி.ஜன.31
மிருசுவில் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் ஐ.தேவாஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமாரும் கலந்து கொள்வர். (ந-9)

◆ ◆ ◆

நெல்லியடி.ஜன.31
நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உல்லியனொல்லை ஆலய முன்றில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், கௌரவ விருந்தினராக கரவெட்டிப் பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு, சிறப்பு விருந்தினராக அல்வாய் தெற்கு கிராம அலுவலர் தி.வரதராஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

சண்டிலிப்பாய், ஜன.31
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ஜி.விமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன், சிறப்புவிருந்தினராக மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோககத்தர் எம்.ஆர். மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

வவுனியா, ஜன.31
வவுனியா தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி பு.உதயசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா கலந்துகொள்வார். (ந-402)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி.ஜன.31
கைதடி யுப்பிட்டர் கல்வி நிலையத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும். நிலைய இயக்குநர் திருமதி வனிதா மதியழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கலந்துகொள்வார். (ஓ-9)

◆ ◆ ◆

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் ஆசியுரையை இலுப்பைத் தாழ்வு முருகமூர்த்தி ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ நி.ஜெகானந்த சர்மா நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக சங்கானை வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# ஆயிரம் பேருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு

***சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில்***

யாழ்ப்பாணம், ஜன.31
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இணைந்து கொண்டவர்களில் ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு இந்த வருடம் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. அதற்குரிய படிவங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் தெரிவித்தார்.
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் இணைந்துள்ள பயனாளிகளில் 60 வயதைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு இந்த வருடத்திலிருந்து மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.
இந்த ஓய்வூதியப் பயனாளிகளுக்கான ஓய்வூதியப் படிவங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சமூகசேவைக் கிளையில் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 13 பேருக்கும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 39 பேருக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 11 பேருக்கும், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் 32 பேருக்கும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 118 பேருக்கும்- கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 28 பேருக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 53 பேருக்கும், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 200 பேருக்கும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 55 பேருக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 62 பேருக்கும்- காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 16 பேருக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 20 பேருக்கும், கரவெட்டி பிரதேசசெயலாளர் பிரிவில் 51 பேருக்கும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 289 பேருக்கும், மருதங்கேணி பிர தேச செயலாளர் பிரிவில் 23 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. (ந-5)

## கலைவிழா

யாழ்ப்பாணம்,ஜன.31
யாழ்ப்பாணம் அரியாலை ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் நடத்தும் கலை விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் கு.லலீசன் தலைமையில்நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கல் லூரி முன்னாள் விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசன், யாழ். பல்கலைக் கழக இசைத்துறை முன்னாள் விரிவு ரையாளர் மா.சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-7)

## நீத்தார் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.31
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் மன்றத்தில் பணியாற்றி உயிரிழந்த பணியாளர்களை நினைவு கூரும் நீத்தார் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.91-5 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை கொழும்பு - 2 இல் அமைந்துள்ள மாமன்றத்தின் தலைமைப் பணிமனையில் இடம் பெறவுள்ளது. (ந-14)


**சேவை நலன் பாராட்டு**



நுணாவில் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 23 வருடங்களாக கிராம சேவையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி சந்திராதேவி சுந்தரலிங்கம் அவர்களின் ஓய்வுகாலம்
மேலும் சீரும் சிறப்புடனும் அமைய வாழ்த்துகின்றோம்.
மாதர் சங்கம், நுணாவில் மத்தி (சி/33099) (3.6.4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**தம்பிப்பிள்ளை தியாகராஜா**
(கிளி/ மாவட்ட கண்டாவளை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதிவானும்)
அவரது சேவையைப் பாராட்டி மாத்தறை மாவட்ட சர்வதேச பாடசாலை மண்டபத்தில் பிரதி அமைச்சர் கௌரவ ஹேமால் குணசேகர அவர்களால் சாமஸ்ரீ தேசமானிய விருது வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதையிட்டு தில்லை மாவடி அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
Dr.சண்டிகா லட்சுமிகாந்தன்
L.K.S. மெடிக்கல் சென்ரர், மீசாலை.



(44163)(45.3.8)

**காணி விற்பனைக்கு | யாழ்ப்பாணம்**
மிருசுவில் A-09 றோட்டில் அமைந்துள்ள காணி 2.6 பேர்ச். Clear Deed with Plan உடன் உடனடி விற்பனைக்குண்டு விலை - 20 Lks ( Nogotiable ) Commercial & Residential Purpose **Call : 0779004013**
max adz

**பதவி வெற்றிடம்**
கிளிநொச்சியில் இயங்கும் அலுவலகம் ஒன்றுக்கு கிளிநொச்சி நகரை அண்டிய பிரதேசத்தில் ஆங்கில அறிவுடைய ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 755 4528

**சிறுநீரகம் தேவை**
இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நோயாளி ஒருவருக்கு B⁻, O⁻ குருதிவகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.
(45.வயதுக்கு உட்பட்டவர்கள்)
தொடர்பு: 077 654 4415

**வீடு வாடகைக்கு**
கிளிநொச்சி நகருக் கண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு சகல விதமான பாவனைக்கும் உகந்தது (வாகன தரிப்பிடம் உண்டு) கல்வி நிறுவனம் நடத்த உகந்த இடம்
**0772 041 262**

IRCON INTERNATIOANL LIMITED
(A Government of India undertaking)
170, Navalar Road, Jaffna, Sri Lanka
Ph.No.021-2217400 Mob.No.710224503 & 759489671


NOTIFICATION - 01/2014

**REQUIRE LAND ON LEASE**

Ircon International Limited (A Government of India undertaking) executing the Railway Project between Pallai - KKS in Sri Lanka needs Land in between Jaffna-KKS along the Railway Track on lease for stacking Ballast/construction Materials. The requirement of land should be approx. one Acre at individual location with proper approach roads. The interested parties may please contact for further details/clarifications at the above mentioned office address and Ph. Nos.

(G.S.Chadchan)
Jt.General Manager
for & on behalf of Ircon International Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாணவருக்கு காலணிகள் வழங்கப்பட்டன**

மீள்குடியமர்வு செய்யப்பட்ட வவுனியா கள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து வெளியிடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள்வணிக பீட 10 ஆவது அணியினரால் காலணிகள் வழங்கப்படுகின்றன. (க-402)

# நீர்ப்பாசனம் செய்ய முடியாமல் பயிரழிவு

## *பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால்*

மாங்குளம், ஜன.31

துணுக்காய் பாரதிகுளத்துக்கும் பாண்டியன் குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள பாலத்தின் புனரமைப்புப்பணிகள் இடம்பெற்று வருவதால் நெற் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பயிர்கள் அழிவடையும்நிலையில் காணப்படுவதாகவும் அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் வளநகர், திருநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இந்தப் பகுதியிலுள்ள வயல்களில் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளனர். உரிய காலத்தில் மழை பெய்யாததால் குளங்கள் வற்றிக் காணப்பட்டன.

இந்த நிலையில் அண்மையில் பெய்த மழையை அடுத்து குளத்தில் தேங்கியுள்ள ஓரளவு நீரின் மூலமாக நெற் பயிர்களுக்குத் தேவையான நீர்ப்பாசனத்தை விவசாயிகள் மேற்கொண்டு வந்தனர். ஆனால் இந்தப் பகுதியிலுள்ள பாலத்தை புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் நீர்ப்பாசனம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் நீர்ப்பாசனத்திணைக்களப் பொறியியலாளர் எஸ்.விகர்ணனிடம் அந்தப் பாலத்தை விரைவாகப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை வவுனிக்குளம் நீர்ப்பாசனக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நீர்விநியோகத்துக்கான குழாய் பொருத்தும் பணிகள் மந்த கதியில் இடம்பெற்றுவருவதாக வும் அதனை விரைவுபடுத்து மாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-400-422)

# மந்த கதியில் செயற்படும் புதுக்குடியிருப்பு பிரதேசசபை

## *வர்த்தகர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு . ஜன.31

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபை மந்தகதியில் செயற்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு நகரில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்ற ஒழுங்குகளை பிரதேச சபை சீராக இன்று வரை மேற்கொள்ளவில்லை. புதுக்குடியிருப்புச் சந்தைக்கான அடிப்படை வசதிகள் கூட இன்னமும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. இதனால் புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள 350 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது:

புதுக்குடியிருப்புப் பிரதேச சபை பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. மேலும் இங்கு போரினால் மோசமான அழிவுகள் ஏற்பட்டுள்ளன. மீள்குடியமர்ந்த மக்களின் தேவைகளையும் பிரதேச சபை நிறைவேற்றி வருகின்றது.

வர்த்தக நடவடிக்கைகளும் படிப்படியாக அபிவிருத்தி கண்டு வருகின்றன. எம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு வர்த்தகச் செயற்பாடுகளை மேலும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டு வருகிறது என்று தெரிவித்தார். (க-55)

# உக்கிளாங்குளத்தில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஜன.31

வவுனியா உக்கிளாங்குளப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா சுகாதாரப்பிரிவினரின் ஒழுங்கமைப்பில் அவர்களுடன் பொலிஸாரும் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் வீடுவீடாகச் சென்று நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அழித்து வருகின்றனர். டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களுக்குப் புகை அடித்து நுளம்புகளை அழிப்பதுடன் நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்கு ஏதுவான பிளாஸ்ரிக் மூடிகள், சிரட்டை, ரயர் உட்பட பல்வேறு பொருள்களை அகற்றியும் வருகின்றனர். வீட்டு வளவில் நீர் தேங்கி நிற்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-402)

# அனைத்து வீதிகளையும் புனரமைத்து வழங்கவும்

## *புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் கோரிக்கை*

முல்லைத்தீவு . ஜன.31

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குச் சொந்தமான சுமார் 200 இற்கும் மேற்பட்ட வீதிகளில் ஒரு சில வீதிகளே புனரமைக்கப்பட்டுள்ள தாகவும் ஏனைய வீதிகளையும் புனரமைத்துத் தருமாறும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவையும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான பல வீதிகள் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. அத்துடன் பல வீதிகள் அழிவடைந்துள்ளன.

இந்த நிலை யில் இந்த வீதிகளை புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபை செயலருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

பிரதேச சபைக்குச் சொந்தமாக சுமார் 485 கிலோ மீற்றர் நீளம் கொண்ட 200 இற்கும் மேற்பட்ட வீதிகள் இருப்பதாகவும் இவற்றை புனரமைப்பதற்கு சபையில் போதிய நிதியில்லை என்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகக் குறிப்பிட்ட சில வீதிகளை மாத்திரம் தற்போது புனரமைத்து வருகின்றோம் என்றும் தெரிவித்தார். (க-55)

# கிளிநொச்சியில் அறுவடை ஆரம்பம்

அக்கராயன், ஜன.31

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. மழையில்லாததால் மானாவாரி நெற்செய்கை முழுமையாக அழிவடைந்த நிலையில் குளங்களின் கீழ் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் நெல் அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் போதிய மழை இல்லாததால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விளைச்சல் குறைவாக உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அறுவடைக்குத் தயாராக உள்ள நெற்பயிர்களைப் பறவைகள் பெருமளவில் நாசப்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக் கின்றனர். (க-18)

# கழிவுகளைக் கொட்டுவதற்கு நிரந்தர இடம் வேண்டும்

## *மன்னார் அரச அதிபரிடம் தெரிவிப்பு*

மன்னார்,ஜன.31

மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்களால் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருள் களைக் கொட்டுவதற்கு நிரந்தரமான ஓர் இடத்தை மன்னார் அரச அதிபர் ஒதுக்கித்தர வேண்டும் என மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்களால் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருள்கள் மன்னார் பட்டித் தோட்டம் பகுதியில் உள்ள தனியார் ஒருவருடைய தென்னந் தோட்டப்பகுதியில் இது வரை காலமும் கொட்டப்பட்டு வந்தன.

எனினும் . அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டதால் பொது சுகாதார பரிசோதகர்கள் அங்கு கழிவுப்பொருள்களைக் கொட்டுவதற்கு அனுமதி மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக மன்னார் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதன்போது மன்னார் சௌத்பார் பகுதியில் கழிவுகளை கொட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

> 5 குப்பை வண்டிகளில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களை சௌத்பார் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அரச அதிபரினால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த திங்கட் கிழமை காலை முதல் நண்பகல் வரை 5 குப்பை வண்டிகளில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களை சௌத்பார் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அரச அதிபரினால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் குறித்த கழிவு அகற்றும் வண்டிகள் கழிவுப்பொருள்களுடன் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டன. இந்த நிலையில் மன்னார் நகர சபைச் செயலாளர், தலைவர் ,உறுப்பினர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று அரச அதிபருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாக தற்காலிகமாக குறித்த பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்ட அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் நிரந்தரமாகக் கழிவுகளைக் கொட்டுவதற்கு இடம் வழங்கினால் மாத்திரமே தொடர்ச்சியாக கழிவுகளை அகற்றமுடியும் என நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் மேலும் தெரிவித்தார். (க-56)




*சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்கள் குப்பை வண்டிகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் போராட்டம்

## 2 ஆவது நாளாகவும் தொடர்கிறது உணவு தவிர்ப்பு



உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள புல்மோட்டை மீனவர்கள்

திருகோணமலை.ஜன.31

நிரந்தரமாக தமது கட்டுவலை மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கான அனுமதி கிடைக்கும் வரை தாம் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று திருகோணமலை, புல்மோட்டை மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டாவது நாளாகவும் நேற்றுவியாழக்கிழமை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களே இவ் வாறு தெரிவித்தனர்.

புல்மோட்டை பிரதான வீதியின் இரு மருங்கிலும் கூடாரமிட்டு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்கு ஒன்று கூடிய மீனவர்கள் நேற்று வியாழக்கிழமையும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

"காலம் காலமாக செய்து வந்த கட்டுவலைத் தொழிலை மீண்டும் செய்வதற்கான அனுமதியை வழங்கு, பட்டினியால் வாடும் புல்மோட்டைக் கிராமத்தைக் கண் திறந்து பாருங்கள், கடல் தொழில் அமைச்சரே ஐந்து ஊருக்குச் சொந்தமான கொக்கிளாய்க் களப்பில் புல்மோட்டை மக்கள் மாத்திரம் புறக்கணிப்பா?, பாரபட்சமின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்து, தடை செய்யப்பட்டதை நிறுத்து, பெரும்பான்மை இன மக்களுக்கு வேறு சட்டமா?, 3,226 சிறு கடல் மீன்பிடியாளர்களின் கதி என்ன?" முதலான சுலோகங்களை ஏந்தியவாறு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரும்பான்மை இன மக்கள் கொக்கிளாய் ஆற்றில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். எமது மீனவர்கள் மட்டும் புறக்கணிக் கப்படுவதோடு அவர்களது மீன்பிடித் தொழில் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 60 வருட காலமாக புல்மோட்டை பிரதேச மக்கள் தமது ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஐந்து கிராமங்களில் புல்மோட்டையைத் தவிர ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட மீனவர்களும் கட்டு வலைத் தொழிலையே செய்து வருகின்றனர். இவ்வாறு இருக்கும் போது ஏன் எமது கிராமத்து மீனவர்கள் மட்டும் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்று போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இன ரீதியான பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும். உயர் மட்ட அதிகாரிகளால் சரியான தீர்வு எமக்குக் கிடைக்கும் வரைக்கும் இந்தப் போராட்டம் தொடரும் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ச)

## சுகவீன விடுமுறையில் கிராம சேவையாளர்கள்

மண்முனை, தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் கடமை புரியும் கிராம சேவையாளர்கள் புதன்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்களது நாளாந்தக் கடமைகளை நிறைவேற்ற வந்த பெரு மளவிலான மக்கள் அதற்குரிய அதிகாரிகள் இல்லாமையினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகத்துக்கு புதன்கிழமைகளில் வருவது வழமை. ஆனால் புதன்கிழமை 45 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசத்தில் 3 கிராம சேவையாளர்கள் மாத்திரமே கடமைக்குச் சமுகமளித்தனர் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேச செயலகத்துக்கு அண்மையில் புதிதாக பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப் பட்டமையே கிராம சேவையாளர்களின் சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று மக்கள் தெரிவித்தனர். (ச-31)

## ரூ.5 கோடி செலவில் நவீன இரத்த வங்கி

அம்பாறை.ஜன.31

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் கூடிய இரத்த வங்கி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சின் நாடளாவிய ரீதியாக முக்கிய வைத்தியசாலைகளில் இரத்த வங்கிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த இரத்த வங்கி நிர்மாணிக்கப்படவுள்ளது.

நெதர்லாந்து அரசின் உதவித் திட்டத்தின் கீழ் 5 கோடி ரூபா செலவில் இரத்த வங்கிக்கான நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்தார்.

அதற்கமைய இரத்த வங்கிக்கான கட்டட நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகையில் இரத்த வங்கிக்கான நவீன உபகரணங்கள் பெறப்படவுள்ளன என்று அவர் கூறினார். (ச-30)



இரத்த வங்கிக் கட்டடம் அமைக்க கல்முனை அஷ்ரப் வைத் தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல். எம். நஸீர் அடிக்கல் நட்டு வைத்தார்.



மட்டக்களப்பு நகரில் உள்ள உணவகங்களுக்கு முன்னால் காணப்படும் கழிவு வாய்க்காலை சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையிடுகின்றனர்.

## உணவகங்களில் திடீர்ச் சோதனை

ஏறாவூர்.ஜன.31

மட்டக்களப்பு நகரில் உள்ள உணவகங்களில் மாநகர சபை யின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸாரும் இணைந்து செவ்வாய்க்கிழமை பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

புளியந்தீவுப் பகுதியில் உள்ள உணவகங்களில் இந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

மனிதபாவனைக்குபொருந்தாத உணவுகளையும் மற்றும் கழிவு நீரையும் சட்ட விரோதமாக வடிகாலில் ஓடவிட்ட உணவக உரிமையாளர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று மாநகர ஆணையாளர் எம். உதயகுமார் தெரிவித்தார். பாவனைக்கு உதவாத பரோட்டா, சமையல்எண்ணெய், மிளகாய்த் தூள் என்பன கைப்பற்றப் பட்டன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. தேவநேசன் தெரிவித்தார். (ச)

**மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல**

**75 ஆவது ஆண்டு நிறைவு யூபிலித் திருவிழா**

- 07.02.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகி தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.
- 15.02.2014 ஆம் திகதி சனி மாலை 06.00 மணிக்கு அன்னையின் திருச்சுருப தேர்ப்பவனியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும்.
- 16.02.2014 ஆம் திகதி ஞாயிறு காலை 7.00 மணிக்கு திருவிழா யூபிலித்திருப்பலி யாழ். ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

"அன்னை வழியாக இறைவனின் அருளும் ஆசீரும் நிறைவாகப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ அன்புடன் அழைக்கின்றோம்"

பங்குத்தந்தை, பங்குமக்கள்
மாதகல்.

(44145)(7.6.3)

**மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா**

**கடைகளுக்கான இடங்கள் வழங்கல்**

- 16.02.2014 ஆம் திகதி மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழாவின் போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் கீழ்வரும் கடைகளுக்கான இடங்கள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- கடைகளுக்கான இடங்கள் தேவைப்படும் வியாபாரிகள் 04.02.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு தூய லூர்து அன்னை திருத்தலத்திற்கு சமுகம் தந்து முன்கூட்டியே கடைகளுக்கான இடத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1) குளிர்பானக் கடைகள்
2) உணவகங்கள்
3) அழகுசாதனக் கடைகள்
4) ஏனைய பெரும் கடைகள்

பங்குத்தந்தை,
மாதகல்.

(44146)(7.6.3)

**யா / சிதம்பரக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்**
**வல்வெட்டித்துறை**
**வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்**

காலம்:- 14.02.2014 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி
இடம்:- கல்லூரி மண்டபம்
தலைமை:- கி.இராஜதுரை (அதிபர்)
(தலைவர், பழைய மாணவர் சங்கம், வல்வெட்டித்துறை)

நிகழ்ச்சி நிரல்

1. தலைமையுரை
2. வலயக் கல்விப் பணிப்பாளரின் கருத்தும், கலந்துரையாடலும்
3. கடந்த பொதுக்கூட்ட அறிக்கை
4. ஆண்டறிக்கை
5. வருடாந்தக் கணக்கறிக்கை
6. பிரேரணைகள்
7. புதிய செயற்குழுத் தெரிவு
8. பிற விடயங்கள்

சிதம்பராக் கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் யாவும் 10.02.2014 காலை 10 மணிக்கு முன்னதாக செயலாளரிடம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நன்றி

கோ.சற்குணபாலன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்

(C/11337)

**யாழ்ப்பாணம் – ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் நடத்தும் கலைவிழா – 2014**

இடம்:- யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்:- (01.02.2014) சனிக்கிழமை மாலை 3.00 மணி

★ ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவர்களின் நடன, மிருதங்க ஆற்றுகைகள் ★ நல்லை க.கண்ணதாஸ் தயாரித்து வழங்கும் 'நாத சமர்ப்பணம்', சிறப்பு நிகழ்ச்சி

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

இயக்குநர், மாணவர்கள், பெற்றோர், ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம், அரியாலை, யாழ்ப்பாணம்.

விழா சிறக்க வாழ்த்துவோர்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
'யாழ்.நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் மனம் கவர் மாளிகை'.
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஏகாம்பரம் புடவை மாளிகை
அனைத்துவகை ஆடைத் தெரிவுகளுக்கும் நாடுங்கள்
74, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(44131)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடிக்கல் நட்டார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு கைரியா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள நான்கு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.
அருகில் நகர அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரும் காணப்படுகின்றனர். (ச-10)

# இலங்கை குறித்து ஆராய ஜெனிவாவில் விசேட குழு

### எதிர்வு கூறுகின்றனர் வல்லுநர்கள்

கொழும்பு. ஜன. 31
எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த அமர்வில் இலங்கையின் செயற்பாடுகளைக் கண்காணிக்க குழுவொன்று நியமிக்கப்படக் கூடும் என்று ராஜதந்திர வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த அமர்வில் இலங்கைக்கு எதிராகத் தாம் பிரேரணையொன்றைக் கொண்டுவரவுள்ளதாக அமெரிக்கா ஏற்கெனவே உத்தியோகபூர்வ ரீதியில் தெரிவித்துள்ளது.

> "இலங்கைக்குப் பொருளாதாரத் தடைகளை விதிப்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் குறிக்கோளாகவுள்ளன."

இந்தப் பிரேரணையின் மூலமாக குறிப்பிட்ட குழுவை நியமிப்பதற்கு அவசியமான இடவாய்ப்புக்கள் கட்டமைத்துக் கொடுக்கப்படக் கூடும் என்று வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
இந்தக் குழுவின் ஊடாகப் பெறப்படும் கண்காணிப்புக்களின் மூலம் அடுத்துவரும் தொடரில் இலங்கைக்குப் பொருளாதாரத் தடைகளை விதிப்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் குறிக்கோளாகவுள்ளன என்று அந்த வல்லுநர்கள் எதிர்வு கூறுகின்றனர். (ச-22)

# வெளிநாட்டு நாணயத்தாளுடன் கட்டுநாயக்காவில் பெண் கைது

கொழும்பு.ஜன.31
தனது கைப்பையில் மறைத்து பெருந்தொகை வெளிநாட்டு நாணயத்தாள்களைக் கடத்த முயன்ற இலங்கைப் பெண் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட பெண்ணின் கைப்பைக்குள் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 16, 440 யூரோக்களையும், 16,000 அமெரிக்க டொலர்களையும் சுங்க அதிகாரிகள் மீட்டெடுத்துள்ளனர்.
நாணயத்தாள்களைக் கடத்த முயன்ற கொழும்பு பிர தேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது.
சென்னையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்குச் சொந்தமான யு.எல். - 124 விமானம் மூலம் இலங்கைவந்தபெண் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில்விமான நிலைய சுங்க அதிகாரிகள் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது, சந்தேக நபரான பெண்ணின் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த யூரோ மற்றும் அமெரிக்க டொலர் நாணயத்தாள்களை மீட்டெடுத்துள்ளனர். (ச)

## இலவச தையல் பயிற்சி

இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள்
நாளை (01.02.2014) சனிக்கிழமை புதிய பிரிவினருக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தையல் பயிற்சி பெற விரும்புவோர் இராஜவீதி, கோப்பாய் மத்தியிலுள்ள நவமங்கை நிவாசத்திற்கு அன்றைய தினம் வருகை தந்து தங்கள் பெயரைப் பதிவுசெய்து வகுப்புக்களைத் தொடர முடியும்.
செயலாளர்.
44148) (45.6.3)

## சேவைநலன் பாராட்டு




யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் 01.10.1979இல் பாதுகாப்பு உத்தியோகத்தராக இணைந்து
பாதுகாப்புப் பரிசோதகர், பதில் பிரதம பாதுகாப்பு அதிகாரி போன்ற உயர் பதவிகளை வகித்து, எமது திணைக்களத்தில் முப்பத்தைந்து ஆண்டுகள் பணியாற்றி இன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறும் எமது சங்க போஷகர்.
Best wishes
சொலமன் டொண் பொஸ்கோ
Best wishes
அவர்களுடைய சேவைகளை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு எல்லாம்வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்

# திடீர் விபத்துக்களால் 500 பேர் உயிரிழப்பு

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு. ஜன. 31
திடீர் விபத்துக்களால் ஆண்டொன்றில் 500 பேர் வரையிலான பிள்ளைகள் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
திடீர் விபத்துக்களால் ஆண்டொன்றில் 18,000 வரையிலான பிள்ளைகள் கை,கால் முறிவுகளுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
திடீர் விபத்துக்கள் சம்பந்தமான அடிப்படைத் தெளிவு இல்லாதிருப்பதே இவ்வாறான விபத்துக்களுக்குக் காரணம் என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது.
பாடசாலைகளில் விளையாடும் போது பிள்ளைகள் திடீர் விபத்துக்களுக்கு முகம் கொடுப்பது அதிக அளவில் ஏற்படுகின்றன என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-22)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

### பெற்றோலிய வள அமைச்சு தகவல்

கொழும்பு.ஜன.31
நாட்டின் எந்தப்பகுதியிலும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று பெற்றோலிய வள அமைச்சு தெரிவித்துள்ளது. முத்துராஜவெல எரிபொருள் களஞ்சியத்தில் இருந்து எரிபொருள் விநியோகிக்கும் தனியார் பவுசர் சாரதிகள் சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.
அதனால் எதுவித எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படவில்லை என்று அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.
இலங்கை எரிபொருள் களஞ்சிய நிறுவனத்தின் கீழ் உள்ள சகல எரிபொருள் நிலையங்களினூடாகவும் நாடு முழுவதும் போதுமான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.
சில பவுசர் சாரதிகள் முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தம் காரணமாக எதுவித எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படாது.
அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று அமைச்சு அறிவித்துள்ளது.
சில கோரிக்கைகளை முன்வைத்து முத்துராஜவெல எரிபொருள் களஞ்சிய தனியார் பவுசர் சாரதிகள் கடந்த சில தினங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆக்கபூர்வமான செல்நெறி நோக்கி வழி நடக்க முனையலாகாதா.....?

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியமர்வு குறித்து, குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதிக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் சந்திப்பு-பேச்சுக்கள்-நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இராணுவத் தளபதி, மிக அண்மையிலேயே குடாநாட்டில் பதவி ஏற்றார். அதன் பொருட்டு இச் சந்திப்பு நடைபெறுவதாகக் கருத முடியவில்லை.

போர் முடிவுற்று சுமார் ஆறு வருடங்கள் கழிந்த நிலையில், தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியவர்களின் எண்ணிக்கையை, பெருப்பித்துக் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு உண்டாகி உள்ளது. காரணம், இன்னமும் சுமார் ஒன்றரை மாதங்களில், நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில், புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையில் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வும் மிக முக்கிய விடயங்களில் ஒன்றாக உருவெடுக்க உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின், இடம்பெயர்ந்தோருக்கான விடயங்கள் தொடர்பில் ஆராயும் விசேட அறிக்கையாளர், சலோகா பெயானி கடந்த மாதம், சுமார் ஒன்றரை வாரங்களுக்கு முன்னர், இங்கு விஜயம் செய்து இடம்பெயர்ந்தோரின் நிலைமை குறித்து நேரில் வடக்கின் நிலைமைகளை கண்டறிந்தார். அதன் பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கை, மிக அதிக அளவில் அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்மறையானதாகவே அமைந்திருந்தது.

பொதுமக்களின் இடங்களிலிருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும், படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விவரங்கள் குறித்து வெளிப்படைத் தன்மை வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், அவர் அவரின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று வசிக்கவே விரும்புகின்றனர் என்பதனையும் தனது அறிக்கையில் அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தினார்.

அவரது அறிக்கையைத் தொடர்ந்தே, இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் குறித்து, அரச பிரபலங்களும் அதிகாரிகளும் ஓரளவில் ஊன்றிக் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

அதன் ஓர் அங்கமாக, அமெரிக்காவில் வைத்து, ஐந்து நாள்களுக்கு முன்னர் (இம் மாதம் இருபத்தேழாம் திகதி) ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இடம்பெயர்ந்த மூன்று லட்சம் மக்களில், இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் இதுவரை மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர். எஞ்சிய ஐம்பதாயிரம் மக்களை மட்டுமே மீளக் குடியமர்த்த வேண்டியுள்ளது என்று அழுத்திக் கூறியுள்ளார்.

ஆனால் யாழ்.மாவட்டத்தில், சுமார் இருபத்து மூன்று வருடங்கள் கடந்தும், வலி.வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை. அதே வகையில் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் இன்றும் தங்கள் சொந்த இடங்களில் காலடி எடுத்து வைக்கவும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அரச உயர் அதிகாரிகளின் இத்தகைய் தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னரே, இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர். இலங்கையில் அகதிகள் என்று எவருமே இல்லை என இரண்டு வருடங்களுக்கு முன்னரே அரச உயர் பீடத்தினால் பிரசித்தப் படுத்தப்பட்டது. ஜனாதிபதியின் செயலாளரின் அறிவிப்பின் பிரகாரம், அது பொய் என்பது ஊர்ஜிதமாகிறது என்றும் கொள்ளலாம் அல்லவா?

அனைத்துலக நியமங்களுக்கு அமைய, இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வுக்கு வகை-வசதி-செய்ய முடியாமல், அதற்கு விருப்பம் இன்றித் தனது உள்ளார்ந்த திட்டங்களை செயற்படுத்தி ஜெனிவாப் "போரை" வெல்வது அசாத்தியம் என்பதனை அரசு உணர்வதற்குப் பின்னடிப்பது ஏன்....?

மனம் வைத்தால் சாத்தியமாகக் கூடிய நல்லிணக்கத்துக்கான பொறிமுறைகளை கைக்கொள்வதற்குப் பின்னடிக்கும், தயங்கும் அரசு, அனைத்துலகம் முன்னிறுத்தி உள்ள போர்க் குற்றச்சாட்டுகள் விவகாரத்தில் இருந்து மீண்டு எழுந்து நிமிர்வதற்கு-

தனது முழு அளவிலான சக்தியை பயன்படுத்தும் தந்திரோபாயங்களில் ஈடுபட்டுள்ளதன் போக்கை உலக நாடுகளால் உய்த்து உணர முடியாமலா போகும்.....?

ஆகையால் அரச தரப்பு, தனது அபரிமிதமான சக்தியை முழு வீச்சில் ஆக்கபூர்வமான செல் நெறியை நோக்கிப் பயன்படுத்த வேண்டும். அது குறித்து சிந்திக்க முனையலாகாதா?

# வல்லரசுகளுடன் மல்லுக்கட்ட தயாராகி வரும் இலங்கை

## திருந்த மாட்டோம் என அடம்பிடிப்பு

ராஜராஜன்

இலங்கை அரசினால் இதுவரை நிறுவப்பட்ட எந்தவொரு ஆணைக்குழுவின் விசாரணைகளும் சர்வதேச தரத்துக்கு ஏற்புடையதாக இல்லையென பிரிட்டனுக்கான வெளியுறவு, பொதுநலவாயப் பணியகத்தின் இணை அமைச்சர் ஹுகோ ஸுவைர் தெரிவித்துள்ளார். அவரின் கூற்று இலங்கை அரசின் நம்பகத்தன்மை எந்த அளவில் காணப்படுகின்றது என்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

நீண்ட 30 ஆண்டுகளாக நீடித்த இலங்கையின் உள்நாட்டுப் போரினால் நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அவ்வப்போது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அழிவுகள் ஏற்பட்டாலும் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த மக்களே விவரிக்க முடியாத அளவுக்குத் துன்பங்களை எதிர்கொண்டனர். அதுவும் தமது நாட்டு அரசுப் படைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டமைதான் வேதனையையும், கவலையையும் ஏற்படுத்தியது.

இலங்கையொரு ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ளப்படுகின்றது. ஜனநாயகம் என்ற சொல் மிகவும் புனிதமானது. இதற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கொடுத்த விளக்கம் உலகப் புகழ்பெற்றதொன்று. மக்களின், மக்களால், மக்களுக்காக (of the people, by the people, for the people) என்பதே ஜனநாயகம் என்றார் லிங்கன். அவரது கருத்துக்கள் இன்றுவரை மறையாமல் போற்றப்படுகின்றன. ஆனால் எமது நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குறியாக மாறிக் காணப்படுகின்றது.

### கேள்விக்குறியாகும் ஜனநாயகம்

இலங்கையொரு பல்லின மக்களைக் கொண்ட நாடாகும். மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. ஆனால் அனைவரும் இலங்கையரே. அனைவரும் இந்த நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றனர். இந்த நாட்டையே நேசிக்கின்றனர். இங்கு பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதத்துக்கே இடமில்லை. ஆனால் ஆட்சியில் இருந்த அரசுகள் வெளிப்படையாகவே இனங்களுக்கிடையே பேதத்தை வளர்த்ததால் நீண்ட போர் ஒன்று இடம் பெற்றது. இரத்த ஆறு ஓடியது.

இலங்கையிலே இடம்பெற்ற இறுதிப் போர் அனைத்துலக கவனத்தை ஈர்த்ததொன்று. மக்களை மீட்பதற்கான மனிதாபிமானப் போர் என்ற சிறப்புப் பெயர் கூட இதற்கு அரசினால் சூட்டப்பட்டதுண்டு. மக்களை மீட்பது என்பது அவர்களை அழிப்பதுதான் என்ற புதியதொரு வியாக்கியானம் இதன் மூலமாகப் புதிதாக உருவாகியுள்ளது. விடுதலைப் புலிகளை அழிப்பது என்பது வேறு. ஆனால் இலங்கை நாட்டின் குடிமக்களாகிய தமிழ் மக்கள் எண்ணிக்கை தெரியாத அளவில் கொல்லப்பட்டதும், காணாமற் போகச் செய்யப்பட்டதும் தான் உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை இல்லை

இந்த நிலையில் இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பாக இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லையென உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் குற்றச்சாட்டுக்கள் வலுத்து வருகின்றன. இந்த நிலையில் பிரிட்டன் இணை அமைச்சரின் அண்மைய கூற்று வெளியாகியுள்ளது. அவ்வப்போது விசாரணை ஆணைக் குழுக்களை நியமிப்பதும் பின்னர் அதனை மறந்து விடுவதும் இலங்கை அரசின் வழக்கமான யுக்திகளாகக் காணப்படுகின்றன. இந்த ஆணைக் குழுக்கள் கூட நம்பகத்தன்மை உள்ளனவா என்பது தொடர்பாக ஆராய்வதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இத்தகைய ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் அரசுக்குச் சாதகமாக அமைவதே வழக்கமாகி விட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இவற்றினால் பயன் எதுவும் கிடைக்காததால் அவற்றின் மீதான நம்பிக்கையை அவர்கள் இழந்து காணப்படுகின்றனர்.

### அழுத்தங்களை முறியடிப்பதில் அக்கறை செலுத்தும் இலங்கை

தற்போது அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் அமைந்துள்ளது. இலங்கையின் நடவடிக்கைகளால் பொறுமையிழந்து சினத்துடன் காணப்படும் முக்கியமான மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிரான காய் நகர்த்தல்களுக்குத் தயாராகி வருகின்றன. ஏற்கெனவே பிரிட்டிஷ் பிரதமர் தமது இலங்கைக்கான வருகையின்போது தெரிவித்த சில கருத்துக்கள் முக்கியமாகக் கருத்தில் கொள்ளத்தக்கவையாகும். அதிலும் கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாட்டின்போது, இலங்கை அரசு எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நம்பகமான பொறுப்புக் கூறும் செயல்முறையை ஆரம்பிக்காது போனால் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அனைத்துலக விசாரணைக்கு அழைப்பு விடுப்போம் என அதில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை ஜனாதிபதியிடம் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். ஆனால் இலங்கை அரசு இதனைச் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. வழக்கம்போல ஏதேதோ காரணங்களைக் கூறுவதுடன் ஜெனிவா மாநாட்டில் தனக்கு எதிராக நிறைவேற்றப் படவிருக்கும் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் முழுமையாகப் பாடுபட்டு வருகின்றது. இதற்கென பெருஞ்செலவில் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சின்னஞ்சிறிய நாடான இலங்கை பெரிய நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதிப்பது என்பது சாதாரணமானதொரு விடயமல்ல.

### ஆதாரபூர்வமாக நிரூபிக்கும்வரை தப்பிக்கமுடியாது

தற்போதைக்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கலாம். ஆனால் பெரிய அழுத்தங்கள் ஏற்படும்போது அவை இலங்கையை நட்டாற்றில் தவிக்க விடலாம் என்பதையும் மறுக்க முடியாது. போர்க்குற்றம் என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அதிலும் அப்பாவி மக்களுக்கு அழிவுகள் ஏற்படுத்துவது என்பது சர்வதேசக் கோட்பாடுகளுக்கு விரோதமானது. இலங்கை அரசு தான் இதில் ஈடுபடவில்லையென என்னதான் கூறினாலும் தன்மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தவறென ஆதாரபூர்வமாக நிரூபிக்கும் வரை அதிலிருந்து தப்பிக்கவே முடி யாது.

இலங்கையொரு பல்லின மக்களைக் கொண்ட நாடாகும். மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. ஆனால் அனைவரும் இலங்கையரே. அனைவரும் இந்த நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றனர்.

அதிலும் தற்போது எழுந்துள்ள காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. உறவுகளை இழந்தவர்களின் கதறலும், கண்ணீரும் எவரது மனச் சாட்சியையும் உலுக்கும் சக்தி வாய்ந்தவை. ஆனால் இதற்கும் ஆப்புவைக்கும் விதமாக விசாரணை, நலனோம்புத் திட்டங்கள் என பிரச்சினையைத் திசை திருப்பும் செயல்களும் இடம்பெற்று வருகின்றன. இவையெல்லாம் பிரச்சினைக்கான உண்மையான தீர்வாக அமையமாட்டாது என்பதை அனைவரும் அறிவார்கள்.

இதேவேளை திருக்கேதீஸ்வரத்தில் தோண்டத் தோண்ட வெளிக்கிளம்பும் எலும்புக் கூடுகள்வேறு, புதியதொரு தலையிடியை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. அங்கு மண்ணுக்கு உரமாகி எலும்புக் கூடுகளின் உருவத்தில் காணப்படுபவர்கள் யார் என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. முழுமையான விசாரணைகளும் இடம்பெறவில்லை. ஆனால் அந்தப் படுகொலைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணமென இராணுவத் தரப்பிலிருந்து அறிக்கை வெளிவந்துள்ளது. ஆனால் இதன் நம்பகத்தன்மை தொடர்பாக இதுவரை ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் போரினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்பான எண்ணிக்கை தொடர்பில் அரசுக்குள்ளேயே மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஜனாதிபதியும் அவரது செயலாளரும் இதில் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான அரசின் அக்கறை எந்த அளவில் உள்ளது என்பதை இது துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே இனியாவது இலங்கை அரசு தனது நிலைப்பாட்டில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். நம்பகத்தன்மைக்கு முதலிடம் கொடுத்து குற்றச் செயல்களுக்கான நீதியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இல்லையேல் சர்வதேசத்தின் பொறிக்குள் சிக்கி இந்த நாட்டு மக்களை மேன்மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் கைங்கரியத்தையே அதனால் மேற்கொள்ள முடியும். அழகான இந்த நாடு தொடர்ந்தும் கண்ணீர்த் துளிகளுக்கு உவமையாகக் கூறப்பட வேண்டுமா என்பதை இங்குள்ள ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும். காலம் தான் அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஏன் மாறினோம்?



பொன்னாங்கண்ணிக் கீரையை சாப்பிடும் பூனைக்கும், அருகம்புல்லை எடுத்துக் கொள்ளும் நாய்க்கும் உள்ள இயற்கை அறிவு நம்மிடம் இல்லையா அல்லது மறைந்து கொண்டிருக்கிறதா? மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் எவ்வித ஆராய்ச்சியும் இன்றி உலகில் ஏற்படும் மாற்றங்களைத் துல்லியமாகக் கணித்துக் கொள்கின்றன.



பி.விபிஷனா

சகதி நிறைந்த பாதையில், ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைத்தால்தான் இலக்கை அடைய முடியும். அப்பாதையைப் பின்தொடர்ந்தால் மட்டுமே பின் தொடர்பவர்களின் பயணம் வெற்றி பெறும். வேறு பாதையைத் தேர்வு செய்யும் சமூகம் துன்புறவே செய்யும். தற்போதைய நவீன சமூகம், முந்தைய பாதையை மாற்றிக் கொண்டுள்ளது.

வாழ்வில், பயணத்தின் முடிவு என்பது அனைவருக்கும் ஒன்றுதான். நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளை நமக்குச் சாதகமாக்கினால் தான் பயணம் இனிமையாக இருக்கும். வெளிநாட்டவர் கண்டு ரசித்த சுற்றுலாத் தலங்களை, அப்பகுதியில் உள்ளோர் ஒரு முறைகூட காண வில்லை என்றால் கவலைபட்டே ஆக வேண்டும்.

நவீன காலத்தில் பல கவிஞர்கள் முளைத்துள்ளனர். சமூக அவலங்கள் மற்றும் வலிகளை வார்த்தைகளாகப் பதிவு செய்யும் அவர்களின் முயற்சி வரவேற்கத் தகுந்தது. ஆனால், மரபுக் கவிஞர்கள் மறைந்து வருகின்றனரே. காரணம், படிக்கத் தெரியாததனாலா அல்லது எழுதத் தெரியாததனாலா? மரபுக் கவிதை போல தங்களது மரபுகள் அனைத்தும் மறைந்து வரும் சமூகத்தையா நாம் உருவாக்கி வருகிறோம்?

கல்வியின் பயன் ஒழுக்கம்; ஒழுக்கத்தின் பயன் நிறைவான சமூகம் என்ற முன்னோர்களின் போதனை மாறி, கல்வியின் பயன் வேலை என்ற நிலை உருவாகி விட்டது. வலியின் பாடங்களே வெற்றிக்கு அருமருந்து என்ற பழமொழியை நவீன சமூகம் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

**இயற்கையை நண்பனாக்குங்கள்**

ஒற்றை இலையாக துளிர்விட்டு, பின்னொரு நாளில் அகன்று வளர்ந்து, தன்னை நாடி வருபவர்களை நிழலால் அணைத்துக் கொள்கிறது மரம்.

ஆனால், வீதி யோரத்தில் கைவிடப்பட்ட நாய்க் குட்டிகளுக்காக ஏங்கும் சிறுவனின் மனநிலை, பெரியவனான பின்பு தொலைந்து விடுகிறது. மரமும், மனிதனும் நேர் எதிர் கோணத்தில் அல்லவா இருக்க நேர்ந்துள்ளது.

கல்வியை விட தன்னம்பிக்கைதான் முக்கியம். கற்ற கல்விக்கு துளியளவும் சம்பந்தமில்லா நாட்டில் விட்டுவிட்டால் தன்னம்பிக்கை இல்லாதவன் தடுமாறுவான். ஆனால், தன்னம்பிக்கை உள்ளவன் ஏதாவது செய்து தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வான்.

மரம்கூட தனது உடலை வளைத்து சூரிய ஒளியைப் பெற்று தானாகவே வளர்கிறது. பிறகு, மனிதன் மட்டும் ஏன் பிறருடைய உதவியை எதிர்பார்த்தவாறே இருக்க வேண்டும்.

நிலத்தைப் பண்படுத்தும்போது எப்பகுதி மேடாய் உள்ளது என்பதை அறிய பொறியியலாளருக்கு உபகரணம் தேவை. மாறாக, பல மைல் தொலைவு பாம்பு போல வளைந்து வளைந்து செல்லும் வாய்க்கால், ஆற்றினை உபகரணங்கள் இன்றி நம் முன்னோர் வெட்டியது எப்படி? நாம் ஏன் இவ்வாறு மாறினோம்? குத்துவிளக்கில் கிடைத்த மன ஒருமுகத் தன்மை, மின்சார பல்பின் வெளிச்சத்தில் கிடைப்பதில்லை.

வாகனத்தில் அடிபட்டு எழுந்து செல்லும் நாய், மரத்தில் இருந்து தவறி விழுந்த அணில் போன்று பிற உயிரினங்களின் வலியை அறிய முயன்றிருக்கிறோமா? மாட்டோம். காரணம், அதனால் பயனில்லை. இதனால்தான் நாம் இயற்கையை விட்டு வேறு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

பொன்னாங்கண்ணிக் கீரையை சாப்பிடும் பூனைக்கும், அருகம்புல்லை எடுத்துக் கொள்ளும் நாய்க்கும் உள்ள இயற்கை அறிவு நம்மிடம் இல்லையா அல்லது மறைந்து கொண்டிருக்கிறதா? மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் எவ்வித ஆராய்ச்சியும் இன்றி உலகில் ஏற்படும் மாற்றங்களை துல்லியமாகக் கணித்துக் கொள்கின்றன.

இயற்கையின் மொழியை அறிந்தாலே போதும். மற்ற உயரினங்களைப்போல அனைத்தையும் இயல்பாகவே வாய்க்கப் பெறுவோம். அவ்வாறு மாறினால், பறவைகள்கூட எமது தோளில் வந்து அமர்ந்து இசைபாடும். இயற்கையுடன் உறவாடுபவர்களும் உள்ளனர். ஆனால், அவர்கள் சொற்ப அளவிலானவர்கள். அதனால் தான் குறைவான அளவிலே ஓவியர்களும், கவிஞர்களும், சிற்பிகளும், கதை சொல்லிகளும் உள்ளனர். அவர்களின் பார்வை வித்தி யாசனமானது. மற்றவர்களின் பார்வையில் இருந்து தப்புவதை அவர்கள் பார்க்கின்றனர். நவீனத்துவம் தவிர்க்க முடியாதது. அது இயற்கையுடன் நேரடி உறவை ஏற்படுத்தவில்லை என்றாலும், அதன் அருகிலாவது நம்மைக் கொண்டு செல்லும்.

# கணினி மயமாகும் மனிதர்கள்

சு.சாரங்கி




இன்றைய நவீன வாழ்வியல் தேவைகளில் தகவல் தொடர்பு மின்னணுச் சாதனங்கள் மனித வாழ்வில் முக்கிய பங்காற்றி வருகின்றன. இவை இல்லாத மனித வாழ்வை யாரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அவை எமது வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்டன.

காடுகளிலும், மலைகளிலும் விலங்குகளோடு விலங்குகளாக அலைந்து திரிந்து கொண்டிருந்த மனிதன், சைகைகளின் மூலமும், ஓசைகளின் மூலமும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டான். இதுவே தகவல் தொழில்நுட்பத்தின் முதற்படி. அன்று தொடங்கிய இதன் வளர்ச்சி, இன்று பல்வேறு துறைகளிலும் தனது விழுதுகளைப் பாய்ச்சி, உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும், அதை அடுத்த நொடியே நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி, உலகத்தையே எமது உள்ளங்கைக்குள் சுருக்கிவிட்டது.

அதிலும் இன்று செல்போனும், கணினியும் இல்லாத வீடே இல்லை. இவையிரண்டும் இல்லாவிட்டால் மனித குலத்தின் செயல்பாடுகளே முடங்கிவிடும் என்பதே இன்றைய வாழ்க்கை முறை.

கோடிக்கணக்கான ரூபாய்களை வரவு - செலவு செய்யும் வங்கிகள் தொடங்கி, ஆயிரக் கணக்கான பயணிகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அழைத்துச்செல்லும் ரயில் போக்குவரத்து, வியாபாரம், கல்வி, மருத்துவம் எனக் கணினி கால் பதிக்காத துறையே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்று நாட்டில் நடைபெறும் பெரும்பாலான கொலை, கொள்ளைச் சம்பவங்களில் பொலிஸார் துப்புத்துலக்கி குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு செல்போன் மற்றும் கண்காணிப்புக் கமராக்கள் பெரிதும் பயன்படுகின்றன.



சுனாமி, புயல், வெள்ளம், கனமழை என அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்களையும் முன்கூட்டியே அறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து நம்மைத் தற்காத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

மருத்துவத்துறையிலும் முன்பு போல உடலைக் கிழித்துச் செய்யும் அறுவைச் சிகிச்சைகளுக்குப் பதிலாக உடலில் ஒரே ஒரு துளை போட்டு அத்துளையின் வழியே உடல் உள்ளுறுப்புகளைப் பார்த்து செய்யும் அறுவைச் சிகிச்சைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. மூளையையும், உடல் உள்ளுறுப்புகளையும் பல கோணங்களில் படம்பிடித்துக் காட்டக்கூடிய நவீன அறிவியல், மனிதன் முழுமையாகக் கணினிமயமாகி விட்டதைத்தான் காட்டுகிறது.

இவ்வாறு மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட கணினி யுகம் பல்வேறு குறைகளையும், தீமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எந்தவொரு கண்டுபிடிப்பையும் நன்மைக்காகப் பயன்படுத்துவதும், தீமைக்காகப் பயன்படுத்துவதும் எமது கைகளில் தானே இருக்கிறது?

அதில் மிக முக்கியமான பிரச்சினை, பெருகி வரும் சைபர் க்ரைம் என்றழைக்கப்படும் தகவல் தொழில்நுட்பக் குற்றங்கள் தொடர்பானதாகும்.

கணிசமான இளைஞர்கள் இணையத் தேடல்களில் சினிமா, கிரிக்கெட் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். நண்பர்களுடன் வெட்டியாக அரட்டை அடிக்கவும் பயன்படுத்துகின்றனர். ஆக்கபூர்வமான அறிவுத் தேடல் கள் மேற்கொள்வோர் மிகமிகக் குறைவு.

பெருகிவரும் மக்கள்தொகை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் நமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வாழ்வை முன்னேற்றிக் கொள்ள இளம் தலைமுறையினர் சிந்திக்க வேண்டுமே தவிர, தங்களின் ஆற்றலை இப்படி வீணான விடயங்களில் விரயமாக்கக் கூடாது.

பாலை உறிஞ்சி, நீரை ஒதுக்கும் அன்னப் பறவைபோல நன்மையைப் பயன்படுத்தி, தீயவற்றை நீக்கும் மனப்பக்குவம் நம் அனைவருக்கும் வந்தால்தான், முன்னேற்றம் என்பது சாத்தியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். மற்றவர்களுக்காகச் சில பொறுப்புகளை ஏற்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.



**இடபம்**: எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பயணங்களால் மகிழ்ச்சி உண்டாகும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்களின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**மிதுனம்**: வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் பல விடயங்களையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். அடுத் தவர்களை குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.



**கடகம்**: உங்கள் பலத்தை உணருவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.



**சிங்கம்**: பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். வேற்றுமதத்தவர் உதவுவார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.



**கன்னி**: உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்துக் கொள்வீர்கள். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.



**துலாம்**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். புதிய வேலை அமையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.



**விருச்சிகம்**: துணிச்சலாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.



**தனுசு**: கடந்த இரண்டு தினங்களாக இருந்த மன உளைச்சல், வீண் பதற்றம், அலைச்சல் யாவும் நீங்கும். புதிய சிந்தனைகள் தோன்றும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**மகரம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள்.



**கும்பம்**: எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஒரளவு இலாபம் வரும். விவாதத்தைத் தவிர்க்கவும்



**மீனம்**: அனுபவபூர்வமாகவும், அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் திசைதிருப்புவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். காணாமற்போன முக்கிய ஆவணம் கிடைக்கும்.

## நாளை

**தை-19 சனிக்கிழமை | 01.01.2014**

திதி: துதியை ந.இ.12.01 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பி.ப.01.43 வரை

சுபநேரம்: 03.36-05.06 வரை
இராகுகாலம்:.09.36-11.06 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### அன்பிலிருந்து எழுவது பக்தனின் தியாகம்

இயற்கை எங்கும் அன்பு நிறைந்திருப்பதைக் காணலாம். ஒரு சமுதாயத்தில் எவையெல்லாம் நல்லவையோ, எவை உயர்ந்தவையோ, சிறந்தவையோ அவையனைத்தும் அன்பின் செயல்களே. சமுதாயத்தில் எவையெல்லாம் தீயவையோ, இல்லை, பேய்த்தனமானவையோ அவையும் அதே அன்பின்– ஆனால் முறை தவறிய செயல்களே. ஒரே அன்புதான் கணவன் மனைவியரிடையே தூய, புனிதக் காதலாக உருக் கொள்கிறது. தாழ் நிலையில், கீழான காமவெறி பிடித்த விலங்குணர்ச்சியாகவும் வெளிப்படுகிறது. உணர்ச்சி என்னவோ ஒன்றுதான். அதன் வெளிப்பாடுகள் தாம் வெவ்வேறிடங்களில் வெவ்வேறாக உள்ளன. ஒரே அன்புதான் நல் வழியிலோ அல்லது தீய வழியிலோ செயற்படுத்தப்படின் ஒருவனை நன்மை செய்யுமாறும், தன்னிடம் இருப்பதையெல்லாம் ஏழைகளுக்கு வழங்குமாறும் செய்கிறது. இன்னொருவனை, தன்னுடன் பிறந்தவனின் கழுத்தைத் திருகிக் கொலை செய்து அவன் சொத்துக்களைக் கவர்ந்து கொள்ளுமாறு செய்கிறது. முன்னவன் மற்றவர்களிடம் அன்பு பாராட்டுகிறான்; பின்னவன் தன்னையே விரும்புகிறான். அன்பின் போக்கு பின்னவன் விடயத்தில் தீயது. முன்னவன் விடயத்தில் சரியானது, நியாயமானது, பொருத்தமானது. உணவைச் சமைப்பதற்குப் பயன்படும் நெருப்பு ஒரு குழந்தையைச் சுட்டு விடலாம். அது நெருப்பின் தவறன்று. அதைப் பயன்படுத்திய முறைதான் தவறானது. இறைவனுடன் கலந்து விடத் துடிக்கும் ஆழ்ந்த அன்பெனும் தவிப்பு – இரண்டற நெஞ்சம் கலக்க வேண்டும் என்று காதலரிடத்தே எழுகின்ற தீவிரமான காதல் – எதுவாக இருப்பினும் ஒன்றாகுதல் என்பதாக முடியும் இந்த அன்பு. உயர்ந்த உயிரினங்களிலும், தாழ்ந்த உயிரினங்களிலும் அவற்றின் இயல்புக்கு ஏற்ப எங்கும் எல்லாவற்றிலும் வெளிப்படுவதைக் காணலாம்.

# புற்றுநோயை எதிர்க்கும் நாவல் நிறத் தக்காளிகள்

புற்றுநோயை எதிர்க்கும் நோக்கில் மரபணு மாற்றப்பட்ட நாவல் நிறத் தக்காளி செடிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கனடாவின் ஒன்ராறியோவில் லியமிங்ரன் என்ற இடத்திலேயே இவ்வகையான தக்காளிகள் வளர்க்கப்பட்டு பழ அறுவடை செய்யப்பட்டுள்ளது.



நாவல் நிறத் தக்காளி

இந்த நாவல் நிறத் தக்காளி செடிகள், உயர் அளவிலான அந்தோசயனின் அதாவது புளுபெரி, பிளாக்பெரி, பிளம்ஸ் போன்ற பழவகைகளில் காணப்படும் Anti Oxidantd டை விட அதிகமான அளவை கொண்டதாக உள்ளது.

அந்தோசயனின் புற்றுநோயை எதிர்க்கும் வல்லமை கொண்டது. சாதாரணமான தக்காளிச் செடியை போன்று இல்லாமல் நாவல் நிறத்தில் காணப்படுகிறது.

இந்தச்செடிகள் கண்ணாடி வீட்டுச் சூழலில் வளர்க்கப்பட்டு. கைகளால் பறிக்கப்படுகின்றன.

இதன் சாற்றை எடுத்த பின்னர் விதைகளும் மரங்களும் பக்டீரியாவினால் ஏனைய பயிர்கள் மாசுபடுத்தப்படாமல் தடுப்பதற்காக எரிக்கப்படுகின்றன.

இந்தப்பயிர்களிலிருந்து பெறப் படும் 2000 லீற்றர் தக்காளி யூஸ், பெப்ரவரி மாத ஆரம் பத்தில் பிரிட்டன் இருதய நோயாளிகளுக்கு அனுப்பபட உள்ளது.

இந்தத் தக்காளியில் நிறைந்துள்ள அந்தோசயனின்ஸ் இருதயக் குழாய் நோய்களை எதிர்க்க வல்லது என்றும், அதற்கு எதிர்ப்புத் தன்மை குறைவாக உள்ளது என்றும் மார்ட்டினின் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பருவகால பழமான புளுபெரிசின் விலையை விட இந்தத் தக்காளி சிறந்த தெரிவு என்றும் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 3 | | 2 | 6 | | |
| 2 | | | 5 | | 8 | | 4 | 7 |
| | 7 | 5 | | | | | 3 | |
| 6 | | | | | 5 | | 7 | |
| | | 1 | 6 | | 4 | 5 | | |
| | 8 | | 7 | | | | | 4 |
| | 2 | | | | | 8 | 1 | |
| 8 | 5 | | 4 | | 1 | | | 3 |
| | | 7 | 8 | | 3 | | | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 5 | 7 | 1 | 2 | 9 | 4 |
| 7 | 2 | 4 | 8 | 9 | 3 | 5 | 1 | 6 |
| 1 | 9 | 5 | 6 | 2 | 4 | 7 | 3 | 8 |
| 5 | 1 | 2 | 4 | 6 | 8 | 9 | 7 | 3 |
| 9 | 3 | 8 | 7 | 5 | 2 | 6 | 4 | 1 |
| 4 | 6 | 7 | 3 | 1 | 9 | 8 | 2 | 5 |
| 8 | 7 | 1 | 9 | 3 | 5 | 4 | 6 | 2 |
| 2 | 4 | 9 | 1 | 8 | 6 | 3 | 5 | 7 |
| 3 | 5 | 6 | 2 | 4 | 7 | 1 | 8 | 9 |





## 'ஸ்டிக்கர்' முறையிலான மின்சுற்றுக்கள் அறிமுகம்

இலத்திரனியல் மின் சுற்றுக்களை உருவாக்குவதற்கு இதுவரை அலுமினியம், ஈயம் போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்பட்டுவந்தன. அத்துடன் இவற்றை எமக்கு வேண்டிய வகையில் மாற்றியமைப்பதில்சிக்கல்களும் காணப் பட்டன. ஆனால் தற்போது ஸ்டிக்கர் முறையிலான மின்சுற்றுக்களை அமைக்கும் தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது. அதன் மூலம் எமக்கு வேண்டிய சுற்றுக்களை இலகுவாகவும், கவர்ச்சிகரமானதாகவும் வடி வமைத்துக்கொள்ள முடியும்.



## அறையின் சாவியாக மாறுகிறது 'ஐ-போன்'



ஸ்மார்ட் கைப்பேசி வகைகளுள் ஒன்றான ஐ போன் (iPhone)மூலம் எண்ணற்ற பயன்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பது தெரிந்ததே.
இவற்றின் அடிப்படையில் தற்போது அமெரிக்காவிலுள்ள ஸ்டார் வூட் ஹோட்டல் ஒன்றில் ஐ போன் அறைச் சாவியாக பயன்படுத்தும் தொழில்நுட்பம் கையாளப்பட்டு வருகின்றது.
குறிப்பிட்ட அறையில் தங்கும் நபர் ஒருவர் தனது ஐ போனுக்கான விசேட 'அப்பிளிக் கேஷனை' தரவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலம் இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த வசதி விரைவில் அன்ரோயிட் கைப்பேசிகளுக்கும் வரவுள்ளதுடன், 2015ஆம் ஆண்டளவில் 123 ஹோட்டல்களில் இவ்வசதி நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடுதிரை பயன்படுத்துவது ஆபத்து


ஸ்மார்ட் கைப்பேசிகள், ரெப்லட் கருவிகள் போன்றவற்றைப் பிள்ளைகள் அதிக நேரம் பயன்படுத்துவது நல்லதல்ல என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள். இந்தப் பழக்கம் அடிமைத்தனத்தைத் தூண்டி, பிள்ளைப்பராய அபிவிருத்தியைப் பாதிப்பதாக ஆஸ்திரேலிய உளவியல் நிபுணர் ஜொசலின் ப்ருவர் தெரிவித்துள்ளார். கூடுதலான நேரம் திரையைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் மூளையில் ஒருவகை இரசாயனங்கள் கூடுதலாக சுரக்கின்றன. இந்தப் போக்கு பாவனையார்களை பதற்றமான நிலைக்கு இட்டுச் சென்று, புறவுலகின் விடயங்களில் இருந்து தனித்து விடச் செய்கிறதென அவர் குறிப்பிட்டுள்ளார். பேஸ்புக், ட்விற்றர் முதலான பிரயோகங்களின் கூடுதலான பயன்பாடு நீண்ட கால அடிப்படையில் மூளையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிகிறது.




## எல்ஜி நிறுவனத்தின் புதிய தயாரிப்பு

LG நிறுவனம் G Pro 2 எனும் வினைத்திறன் கூடிய கைப்பேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. அடுத்த மாதம் இடம்பெறவுள்ள Mobile World Congress கண்காட்சியின்போது அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைப்பேசி 6 அங்குல அளவு கொண்ட தொடுதிரையைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கூகுளின் Android 4.4 KitKat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு இக்கைப்பேசி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கைத் தொலைபேசி பாவனையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## விளையாட்டை கட்டுப்படுத்த புதிய சாதனம்



அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்பான iOS இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களில் இலகுவாக விளையாட்டுகளைக் கையாளக் கூடிய வகையில் புதிய 'கொன்ட்ரோலர்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
Bluetooth 2.1 வயர்லெஸ் தொழில்நுட்பத்தைக் கொண்ட இந்தக் 'கொன்ரோலர் iOS 7 அல்லது அதற்கு பின்னர் வெளியிடப்பட்ட iOS பதிப்புக்களைக் கொண்ட iPhone, iPad \ Pod Touch ஆகியவற்றில் செயற்படக்கூடியது.
அதில் 10 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலமும் இணைக்கப்பட்டுள்ளது.




## கூகுள்-சம்சுங் ஒப்பந்தம்!

இணையதளத்தின் ஜாம்பவான்கூகுளுக்கும்,கைத்தொலைபேசி உலகின் ஜாம்பவான் சம்சுங்கிற்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.
அறிவுசார் தொழில்நுட்ப சொத்துகளின் மீது இரு நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை வளர்க்கும் பொருட்டும், செலவுமிகுந்த சட்ட மோதல்களின் அபாயத்தைக் குறைக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் அடுத்த பத்தாண்டுகளில் பெறவிருக்கும் காப்புரிமைகள் மீதும், தற்போது நடைமுறையில் உள்ள காப்புரிமைகள் மீதும் செல்லுபடியாகும் என்று சம்சுங் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
ஆனால் இந்த ஒப்பந்தம் குறித்த நிதி விதிமுறைகள் அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை.
இரு நிறுவனங்களுக்கிடையேயான இந்த உடன்பாடு சட்டரீதியான மோதல்களைக் குறைத்து கண்டுபிடிப்புகள் மீதான கவனத்தை அதிகரிக்கும் என்று கூகுள் நிறுவனத்தின் துணைப் பொது வழக்கறிஞரான ஆலன் லோ தெரிவித்துள்ளார்.
ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் தொலைக்காட்சிகள் தயாரிப்பில் ஏற்கனவே இந்த இரு நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## ஏ.ரி.எம். திருட்டைத் தடுக்க புதிய தொழில்நுட்பம்



ஏரிஎம் குறியீட்டு எண் திருட்டை தடுக்கும் வகையில் 'டிரை பின்' எனப்படும் புதிய தொழில்நுட்பம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
இந்த தொழில் நுட்பத்தில் வண்ணங்கள், எண்கள் மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்தி விசைபலகை உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் விசைபலகை மாற்றமடையும் வகையிலும் இது உருவாக்கப்பட்டுள்ளது.
அதில் பயனாளிகள் தங்களுக்கு பிடித்த நிறம், வடிவம், குறியீடு மற்றும் எண்கள் அடங்கிய கடவுச்சொல்லைத் தெரிவு செய்யலாம். தற்போது நடைமுறையில் உள்ள நான்கு இலக்க கடவுச்சொல் திருட்டைத் தடுக்கும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஏ.ரி.எம் திருட்டால் பாதிக்கப்பட்ட ஒருவரின் நண்பரான கிளைன் ரெனால்ட்ஸ் என்பவரே இந்தப் புதிய முறையைக் கண்டறிந்து உள்ளார்.
இந்த புதிய முறை மிகவும் பாதுகாப்பானதாகவும், மற்றவர்களால் திருட முடியாத வகையிலும் உருவாக்கப்பட்டு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பேருரையும் மலர் வெளியீடும்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் உப அதிபருமான அமரர் திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியத்தின் நினைவு மலர் வெளியீட்டு விழா இன்று நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை கொக்குவில் இந்துக் கல் லூரி அதிபர் வே.ஞானகாந்தன், முன்னாள் அதிபர் பொ.கமல நாதன், ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைநெறிகள் வர்த்தகத்துறை பேராசிரியர் க.தேவராசா, நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், வலிகாமம் கல்வி வலய ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார் ஆகியோர் நிகழ்த்துவர். (ந-86)

# மரண அறிவித்தல்கள்



## கந்தன் சின்னத்தம்பி

புத்தூர் கிழக்கு, அறிவொளி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தன் சின்னத்தம்பி 29.01.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் -பூதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன், நாகன், முருகன், புதியாள், மாதி, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வெள்ளைச்சியின் அன்புக் கணவரும், ரவியேந்திரன், புஸ்பலீலா, ஜெயேந்திரன், ஜெயச்சந்திரன், உமாகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி, ரவீந்திரன், கமலேஸ்வரி, றட்ணா, சுமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதியுகன், துலக்சன், கனியின்பன், கனியிசை, ரஜீவனா, ரம்யா, தமிழவன், தமிழ்ச்சுடர், தழல்வீரன், சுகின்சன், தனக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் புத்தூர் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
T.P : 077 464 0212

தகவல் :
குடும்பத்தினர்.

(44150)(7.6.3)

## செல்லத்துரை சின்னராசா



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சின்னராசா (29.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இராசம்மா(செல்லம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வமணி(சிவமணி) யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இலங்க நாதன், அழகரட்ணம், மகேஸ்வரி மற்றும் செல்வரட்ணம்(அம்மா அச்சகம்), ஞானமணி, காலஞ்சென்ற சரஸ்வதி ற்றும் இந்திராணி, அருளானந்தசிவம் (லண்டன்), பத்மானந்ததேவி, ஸ்ரீகிருஷ்ண ராசா, மல்லிகாதேவி, காலஞ்சென்ற சுபத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மலோஜினி (கனடா), பத்மறஜனி (சுவிஸ்), சிவசத்தியநாதன் (சுவிஸ்), பத்மரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன்(கனடா), இராசலிங்கம் (சுவிஸ்), பிருந்தா, ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமாவும், தரணியா(கனடா), நிரோஜன் (கனடா), பிரியங்கா(கனடா), தரணியன்(சுவிஸ்), கிருத்திகா, துஷாந்த், மிருத்திகா (ஜேர்மனி), பானுஜன் (ஜேர்மனி), அபிநயா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னத்தம்பிப் புலவர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

(44161)(3.6.4)

## செயலமர்வு

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினரால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள அரச துறைக்கான போட்டி நெறிப்படுத்தல்களை வலுவூட்டும் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்குநல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறும். மாவட்டத்திலுள்ள திணைக்கள அலுவலகங்களிலிருந்து தலா ஒருவர் வீதம் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட உதவிச் செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (ஓ-9)

## யோகாசனப் பயிற்சி

நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நாளை சனிக்கிழமை இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இந்து அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி அனந்தலெட்சுமிதலைமையில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும், பதிவு செய்யப்படாதவர்களும் அன்றைய தினம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யோகாசனப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ந-7)

## உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் அடையாளம் காணப்படாத சைக்கிள் ஒன்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ந)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா கோயில்புதுக்குளத்தை வாழ்விடமாகவும் லண்டனைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம் 23.01.2014 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆழ்வாத்தை தம்பதிகளின் கனிஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பு-பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், Dr.சதானந்தன் (லண்டன்), சிவானந்தன் (கனடா), அருள்ரஞ்சிதம்(லண்டன்), விவேகானந்தன் (கனடா), தற்பரானந்தன் (கனடா), ஆனந்தரஜனி(லண்டன்) ஆகியோரின் அருமைஅம்மாவும், Dr.மதனலோசனி (லண்டன்), நாகராணி (கனடா), பரிமளாதேவி (பாமினி- கனடா), ஆதி (கனடா), பரிமளநாதன் (ரவி- லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, பார்வதி மற்றும் பாஸ்கரமூர்த்தி (சின்னப்புதுக்குளம் -வவுனியா) ஆகியோரின் அருமைச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சண்முகம், வல்லிபுரம், பொன்னம்பலம் மற்றும் நாகேஸ்வரி (சின்னப் புதுக்குளம்- வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பவன், குமரன், ரூபன், தாரணி, சயந்தன் ஆகியோரின் அருமை அம்மம்மாவும், ரவி சங்கர், லலித்சங்கர், சுதாசங்கர், தீபாசங்கரி, துவாசிகா, தனுசன், அரிசன், மைதிலி, மதன் ஆகியோரின் அருமை அப்பம்மாவும், சங்கர், ஜீவிதா, ஈஸ்வர், லோகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2014 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(44164)(3.6.4) தொடர்பு: ரஞ்சி Tel :44(0) 208 864 5197
Mob:078 821 72864 / ரஜனி Mob:074 421 74227

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மயிலன் கிருஸ்ணன்

எம்மை நேசிக்க
12.02.1949

இறைவனை யாசிக்க
11.02.2013

ஆண்டொன்றாகியும் உம் நினைவை மறந்ததில்லை
பண்பின் சிகரமாய் பாசத்தின் திரு உருவாய் புன்னகை
தவழும் அன்பு முகம் தான் எம் மனதில்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள்
ஆண்டவன் அடியில் சென்றதேனோ.


நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகேசு
## சங்கரப்பிள்ளை

[முன்னாள் உரிமையாளர்-
ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்-
மாவத்தை-குருநாகல், சுன்னாகம்]



தோற்றம்
16.07.1931

மறைவு
26.01.2009

ஆண்டுகள் ஐந்து சென்றதப்பா
ஆறவில்லை எங்கள் மனம் - அன்று
நிஜமாய் நின்ற எங்கள் தெய்வம் - இன்று
நிழலாய்த் தோன்றி மறைவதேன் - அப்பா
என்றும் உம் நாம வரிகளுடனே
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடருதப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"மலரகம்"
கொட்டைக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(44000)(7.6)

# நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

## அமரர் கந்தையா சங்கரப்பிள்ளை



தோற்றம் 29.05.1933 மறைவு 03.01.2014

எனது தந்தையாரின் பிரிவால் துயரடைந்து இருந்தபோது சகல வழிகளிலும் உதவி புரிந்த மற்றும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து அனுதாபங்களைப் பகிர்ந்து ஆறுதல்கள் கூறிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதுடன், 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

205, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ச.ஸ்ரீராமச்சந்திரன்
(மகன்-சந்திரன்)

(44168)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஜன.31

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் க.தர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, சனசமூக நிலைய அலுவலர் த.கிருபாகரன், பிரிவு கிராம அலுவலர் ப.நிறஞ்சன், முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.நாகராசா, ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அமைப்பாளர் பொ.நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-9)

## பப்பாசிக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.31

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்டத்தின் ஊடாக மக்களை வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் ஏற்றுமதித் தரத்திலான பப்பாசிச் செய்கையை மேம்படுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பப்பாசிக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முழங்காவில் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.ஜங்கரநேசன், சிறப்பு விருந்தினராக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தேசியத் திட்ட இணைப்பாளர் நிகால் தேவகிரி ஆகியோர் கலந்து கொள்வர். (ந-14)

## புதிய அதிபர் நியமனம்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராக எஸ்.வேலழகன் நியமிக்கப்பட்டுள்ளார். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராக பணியாற்றிய எஸ்.இராசசேகரன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து கல்லூரியின் புதிய அதிபராக எஸ்.வேலழகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த இவர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்தார். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ந-11)



**விளையாட்டு அரங்கு திறப்பு**

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர்களால் அமைத்து வழங்கப்பட்ட விளையாட்டரங்கை இலங்கை கடலோரக் காவற்படைத் தளபதி றியல் அட்மிரல் ரவீந்திர விஜயகுணரட்ண, யாழ். இராணுவத் தளபதி உதயபெரேரா ஆகியோர் திறந்து வைத்தனர். (ந-7)

## கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் மணி விழா நிகழ்வு இன்று

வவுனியா,ஜன.31

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட்டின் மணி விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பலநோக்கு மண்டபத்தில் உபபீடாதிபதியும், மணி விழாக் குழுத் தலைவருமான கு.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

1993 ஆம் ஆண்டு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை விரிவுரையாளராகவும், விரிவுரையாளர் இணைப்பாளராகவும், உபபீடாதிபதியாகவும், பதில் பீடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும் 21 ஆண்டுகளாக சேவையாற்றிய பேர்ணாட்டின் சேவையைப் பாராட்டி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த மணி விழா நிகழ்வில் வரவேற்புரையினை விரிவுரையாளர் இணைப்பாளர் தி.ஜெயகாண்டீபன் நிகழ்த்த, வாழ்த்துரைகளை கல்லூரியின் முதற் பீடாதிபதி செ.அழகரெத்தினம், முன்னாள் உபபீடாதிபதி த.இன்பதேவராஜா, கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், முன்னாள் உபபீடாதிபதி த.ம.தேவேந்திரன், முன்னாள் உபபீடாதிபதி செ.சகாப்டீன், பதிவாளர் திருமதி சி.சுகிர்தாதேவி ஆகியோர் நிகழ்த்துவர். மணிவிழா மலர் வெளியீட்டுரையினை நிதி நிர்வாக உபபீடாதிபதி க.சுவர்ணராஜா நிகழ்த்த நயவுரையினை ஆசிரிய கல்வியியலாளர் ந.பார்த்தீபன் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் சு.அமிர்தலிங்கம், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா, கலாநிதி அகளங்கன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் நிகழ்த்துவர். நன்றியுரையை விரிவுரையாளர், இணைப்பாளர் சு.பரமானந்தம் நிகழ்த்துவார். (க-421)

## 36,387 பேர் சிகிச்சை மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில்

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவில் 36,387 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். மேலும் இந்தச் சிகிச்சைப் பிரிவில் நாய்க்கடியினால் 445 பேரும், மகப்பேற்று விடுதியில் 17 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். (ந-100)

## விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிள்களினால் மோதிவிட்டுத் தப்பிச் செல்லும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இத்தகைய சம்பவங்கள் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கடந்த ஒரு வார காலத்தில் மூன்று இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சம்பவம் ஒன்று கடந்த 28 ஆம் திகதி இரவு சுன்னாகம் இலங்கை வங்கி ஒழுங்கையில் உள்ள ரயில் கடவைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த செல்லத்துரை சுரேந்திரன் (வயது -34) என்பவர் படுகாயமுற்ற நிலையில் அயலவர்களின் உதவியுடன் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார்சைக்கிளினால் மோதியவர் விபத்து நடந்த இடத்தில் இருந்து காயம் பட்டவரையும் கவனியாது தப்பி ஓடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-86)

♦ ♦ ♦

மருதனார்மடம் றொட்டியாலடி சேவிஸ் நிலையத்துக்கு அருகில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை பகல் சுன்னாகத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமுற்றவர் தனதாஸ் ராகவன் (வயது -21) என்பவராவார்.

குறிப்பிட்ட விபத்து சம்பந்தமாக விசாரணைகளை மேற் கொண்ட சுன்னாகம் பொலிஸார் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபரைக் கைது செய்ததுடன் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து பிணையில் குறித்த நபர் விடப்பட்டுள்ளார். (ந-86)

## மாணவத் தலைவர் படுகாயம்

வலி. வடக்கு, ஜன. 31

பாடசாலை மாணவனால் தாக்கப்பட்ட பாடசாலை மாணவத் தலைவர் தலையில் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று வியாழக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டியில் உள்ள பிரபல்யமான பாடசாலையொன்றின் மாணவத் தலைவன் சக மாணவன் ஒருவனிடம் காலணி அணியாதது சம்பந்தமாகக் கேட்டுள்ளார்.

இதனால் கோபமுற்ற மற்றைய மாணவன் அருகில் இருந்த பைப்பினால் மாணவத் தலைவனின் தலையில் அடித்துள்ளார்.

இதனால் படுகாயம் அடைந்த மாணவன் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட இந்த சம்பவம் பாடசாலை மட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ந-86)

## விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குண லிங்கம் சேவையில் இருந்து இளைப்பாறியதையடுத்து மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய கே.பொன்னையா கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

இதனையடுத்து மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு வடக்கு மாகாண சபை கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (ந-173)

**பொறியியல் தொழில்நுட்பம்**
**Engineering Technology**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

2015/2016, A/L மாணவர்களுக்கான பொறியியல் தொழில்நுட்பப் பாடங்கள், தொழில்நுட்பக் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் எமது நிறுவனத்தில் 09.02.2014 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. 01.02.2014 இல் இருந்து அனுமதிகளைப் பதிவு செய்யலாம்.

இடம் : SIPLAN Knowledge Center (Pvt) LTD
[ELCARDO Industries (Pvt) LTD]
(தம்றோ காட்சியறைக்கு அருகில்)
No.170, Palaly Road, Jaffna.
T.P.No: 071 864 9221 071 454 0968
(44170) (10.6)

**பிற்போடப்பட்டுள்ளது**
**பாஷாண உத்வாசன சபிண்டீகரணக் கிரியைகள்**

எதிர்வரும் 02.02.2014 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவிருந்த எமது தந்தையார் அமரர் சபாபதி ஐயர் சோமசுந்தரம் ஐயா (நமசிவாய ஐயர்) அவர்களின் பாஷாண உத்வாசன சபிண்டீகரண கிரியைகள் (ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள்) தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 13.02.2014 (வியாழக்கிழமை) நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தீர்த்தாங்குளம் பிள்ளையார் கோயில்,
கொட்டியவளை பத்தமேனி, அச்சுவேலி.
T.P: 021 7200058,
077 1641360 (செந்தில்)
077 3151404 (ஸ்ரீ)
(44171) (10.6)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




**மாணிக்கவிழா வாழ்த்து**
**S.K. கிருபாகரன்**
(இயக்குநர் - மதுரம் கல்வி நிறுவனம்)

பத்து நாலு அகவைக்குள்
பணிகள் பலவாற்றிய
பணிவுள்ளம் கொண்ட
பண்பாளனே நும்
பணிகள் மேலும் தொடர்ந்து
பொன் மணி வைரம்
முத்து என மிளிர்ந்து
நூற்றாண்டு நிலைக்க
வாழ்த்துகிறோம்
டச்சுறோட், இருபாலை.

தங்கள் மகிழ்வூட்டலில் கற்ற
நாம் கற்றுத்தேறி ஆளாகி வந்து
எம் கிருபா தாத்தா வாழ்க என
வாழ்த்த நூற்றாண்டு காலம் உடல்
பலத்துடன் இருக்க வேண்டுமென
விக்கின விநாயகனை பிஞ்சு
மனத்தால் வேண்டுகிறோம்
மதுரம் கிட்ஸ் முன்பள்ளி,
ஆசிரியர்களும் பாலர்களும்.
(சி/11352) (3.6.4)




**பருத்தித்துறை நகராட்சிமன்ற**
**அறிவித்தல்**
**பொதுச்சந்தை**

பருத்தித்துறை நகராட்சிமன்றத்தால் எமது நவீன கடைத்தொகுதியில் முதலாவது மாடியில் பொதுச்சந்தை தாபிக்கப்பட்டுள்ளது. இப்பொதுச்சந்தை தவிர்ந்த ஏனைய இடங்களிலோ நடைபாதைகளிலோ மரக்கறி, பழவகை விற்பனை போன்ற சந்தை வியாபாரம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சந்தையில் வியாபாரம் செய்ய ஆர்வமுள்ளவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடலாம் என்பதனை இத்தால்அறியத்தருகின்றேன்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
28.01.2014.

சபா.ரவீந்திரன் (JPUM)
நகரபிதா,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைபவரீதியான திறப்பு விழா இன்று

அனைவரும் ஆவலுடன் எதர்பார்த்திருக்கும், யாழ் மண்ணிற்கு மேலும் மெருகூட்டும் அழகின் பூரணத்துவம் முழுமையாகக் கலந்த, வானளாவிய சொகுசு தொடர் மாடிக் கட்டிடம் துளசி மஹால் தேசமான்ய கென் பாலேந்திரா அவர்களினால் இன்று காலை 10.00 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது.



தேசமான்ய கென் பாலேந்திரா
பிரதம அதிதி

துளசி மஹால் திறப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக என்னை அழைத்த Peninsular Property Developers இன் தலைவர் திரு. ரஞ்சன் ஆசிர்வாதம் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

Sanken Group இன் உறுப்பினரான Peninsular Property Developers உள்நாட்டு மற்றும் சர்வதேச கட்டுமான துறையின் முன்னிலையில் பல ஆண்டுகளாக பல விருதுகள் பெற்ற நிறுவனமாக விளங்குகின்றது. இந்நிறுவனமானது தனது துணிகர முயற்சியினால் கொழும்பில் பல முக்கிய வதிவிட அபிவிருத்திகளை கடந்த வருடங்களில் மேற்கொண்டிருந்தது. அவர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் தனது தடத்தினை பதித்துள்ளமையானது இந்நிறுவனத்தின் வரலாற்றில் மட்டுமல்லாது இலங்கை வரலாற்றிலேயே வதிவிட அபிவிருத்தியில் பாரியதொரு மைல்கல்லாகும். துளசிமஹால் இவ்வாறாக யாழ்ப்பாணத்திலும் நியாயமான விலைகளில் அதிதரமிக்க குடியிருப்புகளை அமைப்பதற்கான வெற்றிடத்தை நிரப்பியுள்ளது.

அதே நேரம் சிறந்த பொருளாதார வளர்ச்சியோடு முன்னிலையில் காணப்படும் Peninsular ஆனது யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்யும் தனியார் துறையினருக்கான சிறந்த வரப்பிரசாதமாக அமைகின்றது. எங்களில் சிலர் இலங்கையின் மற்றைய மாநகரங்களில் இருந்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களாக யாழ்ப்பாணத்தில் வேர்பதித்து இவ்வாறான திட்டங்களில் ஆர்வம் காட்டி வருகின்றமையை முன்னிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு சில உதாரணமாக யாழ் நகரில் காணப்படும் மஹாஜன கல்லூரியின் விரிவாக்கம், தெல்லிப்பளையில் உள்ள புற்றுநோய் பிரிவு, அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள், "Yarl Hotel" திட்டம் மற்றும் A9 அதிவேக பாதையின் அபிவிருத்தி என்பனவற்றை குறிப்பிடலாம்.

Peninsular Property Developers இன் தலைவர் மற்றும் இயக்குனர்கள் குழு மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு இவ் அபிவிருத்தி மேலும் தொடரவும் அவர்களின் லட்சியத்தை பூர்த்தி செய்யவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.



ராஜன் ஆசிர்வாதம்
தலைவர்
*Peninsula Propery Developers (Pvt )Ltd*

இன்றைய தினம் மிகவும் சிறப்பான விஷேட தினமாகும் ஏனெனில் யாழ்பாணத்தில் முதலாவது தொடர் மாடிக்கட்டிட அபிவிருத்தியினை வைபவரீதியாக திறந்துவைத்துள்ளது Peninsula Propoerty Developers. யாழ்குடாவில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தமது பழைமையான நினைவுகளை மீட்டிப்பார்க்கும் பொழுது தமக்கென ஒரு வீட்டை தாம் பிறந்த சொந்த மண்ணில் நிர்மாணிக்க வேண்டும்மென்றே அனைவரினதும் கனவாக இருக்கும். எனினும் இப்பொழுது அதிகரித்து செல்லும் கட்டட நிர்மாணப் பொருட்களின் விலை உயர்வினாலும் தொலைவிலிருந்து கொண்டு வேலைகளை பார்ப்பதில் அசௌகரியத்தினாலும் அனேகரின் கனவு பாதியிலே அற்றுப்போய் விடுகின்றது.

இவ் அசௌகரியங்களை மனதில் வைத்துக்கொண்டு Peninsula Property Developers யாழ்ப்பாண நகரில் 36 மாடிகளை கொண்ட சொகுசு குடியிருப்பை நிர்மாணித்துள்ளது. இக்குடியிருப்பு ஒரு தனித்துவமான Two-bed-2 Key எனும் தொனிப்பொருளுடனான தொடர்மாடியாகும். பொழுது போக்கை கழிக்ககூடிய திறந்த வெளி கட்டிடம், சலவை வசதிகள், உணவகங்கள், வாகன தரிப்பிட வசதி மற்றும் வாடகை சந்தை போன்ற பல வசதிகளுடன் இத்தொடர்மாடி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் 360 பாகை அளவை கொண்ட பச்சை பசேலேன இயற்கையை இரசிக்ககூடிய அமைதியான அழகிய சூழலில் அமைந்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். இத் தொடர்மாடிகளை வெவ்வேறுப்பட்ட பாரம்பரியத்தை சார்ந்தவர்கள் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டுவதோடு புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் இதில் ஆர்வம் காட்டுவது இத் திட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இக் கட்டிட நிர்மாண வேலைத்திட்டத்தில் Sanken Lanka Group 100 இளைஞர்களுக்கு கட்டிட நிர்மாணத்துறையில் பயிற்சி அளித்ததோடு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வேலைவாய்ப்பினையும் அதிகரித்துள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்ட திரு. கென் பாலேந்திரா அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிப்பதோடு இத்திட்டம் வெற்றியடைய அர்ப்பணிப்போடும் விடாமுயற்சியோடும் செயற்பட்ட இயக்குனர் குழாம் மற்றும் Sanken நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் அரசாங்க அதிகாரிகள், ஆலோசகர்கள் மற்றும் இத்திட்டதிற்கு உறுதுணையாக நின்று உதவிய பங்குதாரர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.



திரு.மகேன் வீரசேகர
குழு தலைவர்
*Sanken*

முக்கிய குடியிருப்பு பகுதியான யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதை முன்னிட்டு நாம் பெருமையடைகின்றோம். வடக்கில் பணிகளை செய்வதற்கு அதிகளவு எங்களுக்கு பரிச்சியம் இல்லாதபொழுதிலும் மிகுந்த தரமான கட்டுமானத்தை மிகக்குறைந்த காலப்பகுதியிலேயே நிறைவுசெய்துவிட்டோம்.

சிறந்த பெறுமதிமிக்க உருவாக்கத்தினை தருவதில் கட்டுமான அபிவிருத்தியாளர்கள் விவசாயிகளுக்கு ஒத்தவராகளாவர். குறைந்த விலையில் தரமான கட்டுமானத்தை முதன்மையாக கொண்டு ஓர் பலமான அடியினை யாழ்ப்பாணத்தில் எடுத்துவைக்க பாடுபட்ட எமது குழுவினருக்கு நான் மனமுவந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பயணத்தில் பொருட்களை கொள்வனவு செய்வது முதல், சேவைகள் மற்றும் பொருட்களின் ஆராய்வு போன்ற பல விடயங்களிலும் இங்கு நாம் பல சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்திற்கான வேகமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி அதிலும் குறிப்பாக புகையிரத அபிவிருத்திகள் ஆகியன சிறந்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றன.

இவ் அபிவிருத்திகளுக்கு முதலீடு செய்யும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் மற்றுமொரு செழிப்பான நகரமாக மாற்றமடையும் என நாம் நம்புகின்றோம்.

## TULASI MAHAL

**Jaffna's first luxury apartment development**



(C/11656)

**Associates :**

Design build by **Sanken**

APS · Auto & Metal Crafts · Ke · LANKATILES · Ranjanas Ceramic · UTE · CAT · Samurai Engineering Services & Consultants (Pvt) Ltd. · SINGER Mega THE BIG EXPERIENCE

**No: 07, Kachcheri Lane, Jaffna. Tel: 0714 960 160 Email: tulasimahal@gmail.com Web: www.tulasimahal.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டம் செலுத்த முடியாதோர் சமூகம் சார் பணிகளில்

கிளிநொச்சியில் சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டப் பணம் செலுத்தமுடியாமல் சிறைக்குச் செல்பவர்கள் சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக் களத்தினால் சமூக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் சிறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு தண்டத்தைச் செலுத்த முடியாமல் சிறைக்குச் செல்பவர்களைச் சமூகம் சார் பணிகளில் குறித்த அலுவலகம் ஈடுபடுத்தி வருகின்றது. இதுவரை 29 வழக்குகள் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாறு சமூகம் சார் பணியில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## 21,156 நோயாளருக்கு சமைத்த உணவு

### சாவகச்சேரி மருத்துவமனை வழங்கியது

தென்மராட்சி, ஜன.31

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த வருடம் 21 ஆயிரத்து 156 பேருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளதாக மாதாந்த ரீதியாக விளம்பரப் பலகையில் புள்ளி விவரக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அவர்களில் பெரும்பாலான நோயாளர்கள் தூர இடங்களிலிருந்து (பளை, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில்) வந்து விடுதிகளில் தங்கியிருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விடுதியில் தங்கியிருப்போருக்கு வழமையான உணவு மற்றும் விசேட உணவு வகைகள் எனப் பிரிக்கப்பட்டு மொத்தமாக 22 லட்சத்து 26 ஆயிரத்து 625 ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் வேளையில் மருத்துவமனையில் காணப்பட்ட சமையல் கூடம் அழிவடைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு வைத்தியசாலை மீள இயங்கத் தொடங்கிய காலம் தொடக்கம் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட ஊழியர் விடுதி தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு பத்து வருடங்களுக்கு மேலாக வசதிகள் அற்ற நிலையில் சமையலறையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மருத்துவமனையில் 50 லட்சம் ரூபா செலவில் சமையல் கூடம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

குறித்த சமையல் கூடம் தென்னிலங்கை மருத்துவமனைகளில் உள்ளமை போன்று சமை யல் எரிவாயு அல்லது மின்சார அடுப்புகளைக் கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும் என்று பலரும் கருதுகின்றனர்.

தற்போது உள்ளது போன்ற விறகு அடுப்புகள் பயன்படுத்தப்படுமாயின் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் புகைகளால் பாதிக்கப்பட்டு சுவாச நோயாளிகளாக மாறும் அபாயம் உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். நீண்ட காலப் பயன்பாடு உடைய சகல வசதிகளையும் உள்ளடக்கிய நிலையில் சமையல் கூடம் அமைய வேண்டும் என்பது மக்களின் விருப்பமாகும். (வ)

**வீடு வாடகைக்கு தேவை**

மாற்றலாகி வரும் அரசாங்க அலுவலருக்கு வீடு தேவை. கச்சேரிக்கு அண்மையிலோ அல்லது சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அண்மையிலோ அமைந்திருத்தல் விரும்பத்தக்கது.

T. P : 071 3108395, 071 3659825

**தேவை**

சகல விதமான நெல் மற்றும் தானிய வகைகள் கொள்முதல் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு : சிவா பிறதர்ஸ்
இல. 205 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P : 077 7722215

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிப்பிள்ளை தில்லையம்பலம்



அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை தில்லையம்பலம் 30.01.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாறுப்பிள்ளையின் சகோதரியும், விநாயகமூர்த்தி, நாகபூரணம், காலஞ்சென்ற சண்முகமூர்த்தி மற்றும் மகேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, சுந்தரமூர்த்தி, ரேவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்களாதேவி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் அங்கையற்கண்ணி, காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் மனோகரன், அகிலேஸ்வரி, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், விதுஷன், மதுர்சன், ஜெயபாலினி, ஜெயபூரணி, ஜெயக்குமார், ஜெயந்தினி, தவக்குமார், நிருஜா, பிரியதர்சினி, ஜெயரூபன், சுதர்சன் (பிரான்ஸ்), சுதர்சினி (லண்டன்), சுதாஜினி (பிரான்ஸ்), கோகிலன், சுஜாந்தினி, அஜித்கான், நிதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகனியா, தரணியா, அபிநவன், அக்ஷயா, நர்த்தனி, சுருதி, வராகன், மதுமிதா, லீலூசா, சயந்தன், அகிந்தன், சகிந்தன், அபிராமி, ஆகாஷ், அபினாஸ், அபிரா, அனிஸ், கனிசா, ஜனுசா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கச்சாய்எறியால்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

(53100)(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரி**

**01.02.2014 அன்று புதிய வகுப்புக்கள் ஆரம்பம் நேரம் பி.ப 3.00 மணி**

| | | |
|---|---|---|
| வாய்ப்பாட்டு (சங்கீதம்) | யாழ் | ஆர்மோனியம் |
| நடனம் | வீணை | ஒக்ரபாட் |
| மிருதங்கம் | புல்லாங்குழல் | டிரம்ஸ் |
| தபேலா | கிற்றார் | நாடகம் |
| வயலின் | கீபோட் | ஓவியம் |

விண்ணப்பித்தோரும், புதிதாக சேர விரும்புவோரும் அன்று தங்கள் வரவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலையைப் பயிலவிரும்பும் வசதிகுன்றிய ஆர்வமுள்ளோர் 2014.02.01 நாள் ஆரம்ப நிகழ்வில் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் அவ்வருடத்தின் கவின்கலைச் சாதனையாளர்களில் முதல் நிலை மூவருக்கு துறைசார் இசைக்கருவி பரிசாக வழங்கி மதிப்பளிக்கப்படுவர்.

இயக்குநர்
பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரி,
எண்-00, 2ம் குறுக்குத்தெரு,
கனகபுரம், கிளிநொச்சி.
தொடர்பு கொள்ள : 0772880830, 0770049066.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20.05.1951 — விண்ணில் 10.02.2013



### அமரர் சுப்பிரமணியம் ஆனந்தராசா

அவர்களின் ஓராண்டு நினைவு நிகழ்வு ஜேர்மனியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (31.01.2014) வெள்ளிக்கிழமை நடைபெறும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்றும்

சாதுஜன் தொலைத் தொடர்பு சேவை,
K.K.S. றோட், கொக்குவில் சந்தி.

S. சந்திரகுமாரும்,
குடும்பத்தினரும்.

(C/1356)(10.4)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை ஸ்ரீரங்கநாதன்



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பாறேனில் கடமையாற்றியவருமாகிய சின்னத்துரை ஸ்ரீரங்கநாதன் (24.01.2014) அன்று பாறேனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்மணி தம்பதியரின் அன்புப்புதல்வனும் திருலோகநாதன், திருச் செல்வம் (சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்) திருவைகுந்தநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), இராஜசுலோஜனா காலஞ்சென்ற சிவலோகநாதன் ஆகி யோரின் அன்புச்சகோதரரும் கமல பாக்கியம், யேன் கிறிஸ்ரீன், ரஜனி, செல்வகுமார் ஆகியோரின் அன்புமைத்துனரும் சுகந்தன், ஜெகந்தன், வேணுகா, தர்ஷினி, சசிதா, லக்ஷினி, இராகுலன் ஆகியோரின் சித்தப்பாவும் வினுஷாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2014) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நாகம்மாள் கோயில் வீதி உடுவில் கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சி. திருச்செல்வம்
தொ.பே. 071 4408794




**தடையில்லாத மின் விநியோகத்தால் யாழ் நகரின் உயர்ந்த கட்டிடத்தை இயங்கச் செய்வதையொட்டி பெருமையடைகிறோம்**




**துளசி மஹால் சொகுசு தொடர்மாடி மனை Cat® ஒலிம்பியன் ஜெனரேட்டரினால் வலுவூட்டப்பட்டுள்ளது.**

யாழ் நகரின் முதல் சொகுசு தொடர் மாடிக்கட்டிடம் தாம் விநியோகம் செய்த 200kVA மின் வலுகொண்ட பெக்கப் ஜெனரேடரினால் வலுவூட்டப்பட்டுள்ளதால் UTE நிறுவனம் பெருமையடைகிறது. UTE யாழ் வாழ் மக்களுக்கு அதியுயர் தரத்திலான வாசஸ்தலம் அமைத்துக் கொடுத்ததையொட்டி அதன் உரிமையாளர்களான பெனின்சூலா ப்ரோப்பர்டி டிவலர்பர்ஸ் நிறுவனத்தை பாராட்டுவதோடு, துளசி மஹால் பங்குதாரர்களுக்கும் எமது நல்லாசிகளை UTE இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறது.

UTE ~ The Journey Continues... Long After the Sale

United Tractor & Equipment (Pvt) Ltd.
No. 683, Negombo Road, Mabola, Wattala.
Tel : 011 2932109 | Fax : 011 2931550 | Hotline : 077 275 3146
UTE CAT
ute.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66 ஆவது சுதந்திரதின விழா கேகாலையில் கொண்டாட்டம்

## போக்குவரத்துக் கடமையில் 600 பொலிஸார்; 3,000 பேர் விசேட விருந்தினர்களாக அழைப்பு



அமைச்சர் ஜோன் செனவிரட்ன

கொழும்பு, ஜன.31
இலங்கையின் 66 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை எதிர்வரும் 4 ஆம் திகதி கேகாலையில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"உலகம் முழுவதும் தாய் நாட்டை வெற்றிகொள்ளச் செய்வதற்கு ஒன்றுபடுவோம்" என்ற தொனிப் பொருளில் இந்த முறை சுதந்திரக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேசத்தின் மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியை மையமாகக் கொண்டு கேகாலையில் சுதந்திர தின நிகழ்வுகளை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சுதந்திர தின அணிவகுப்பு மரியாதைகளில் 1400 இராணுவத்தினரும், 250 கடற்படையினரும், 250 விமானப் படையினரும், 250 பொலிஸாரும், 250 சிவில் பாதுகாப்புப் படையினரும், 325 தேசிய பயிலுநர் படையினரும், 300 இளைஞர் படையணியினரும் கலந்து கொள்வர்.

768 பாடசாலை மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர். 3000 பேர் விசேட அதிதிகளாக அழைக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை நகரில் சுதந்திர தின நிகழ்வுகளை முன்னிட்டு விசேட போக்கு வரத்து ஏற்பாடுகளுக்காக 600 போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்புக்கு வெளியே தேசிய சுதந்திர தின நிகழ்வுகளை நடத்துவதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தின்படிகடந்தஆண்டுக்கான நிகழ்வு திருகோணமலையில் நடை பெற்றது.

இந்தச் சுதந்திர தினத்தைக் கண்டுகளிப்பதற்காக லட்சக் கணக்கானோர் நகரில் ஒன்று கூடியிருந்தனர். கொழும்பில் சுதந்திரதின நிகழ்வுகள் நடைபெறும்போது அதனைப் பார்வையிடுவதற்கு வெளி மாவட்டங்களிலிருந்து பொதுமக்கள் வருவதற்கு சிரமம் ஏற்படுவதாலேயே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருந்தார் - என்றார். (ச)

## திருடப்படுகின்றன மடிக்கணினிகள்

### பொலிஸ் தலைமையகம் கூறுகிறது




மடிக்கணினிகள்

கொழும்பு, ஜன.31
குழுவொன்றாகச் செயற்பட்டு மடிக்கணினிகளைத் திட்டமிட்டுத் திருடும் நடைமுறை கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்று வருகின்றது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் 36 மடிக்கணினிகளும், இந்த ஆண்டின் ஜனவரிமாதஆரம்பத்தில்இருந்து20 ஆம் திகதி வரையிலுமான காலத்துள் 36 மடிக் கணினிகளும்திருடப்பட்டுள்ளனஎன்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ரயில், பஸ்கள் ஆகியவற்றின் பயணிகளிடமிருந்து மடிக் கணினிகளும் மற்றும் வீடைப்புக்களின் போதும் மடிக் கணினிகள் திருடப்பட்டு வருகின்றனஎன்றுபொலிஸ்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இத்தகையதொரு நிலைப்பாட்டின் கீழ் பயணிகளுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவைக்கான ரயில் மற்றும் பஸ் பயணங்களின் போது மடிக்கணினிகள் எடுத்துச் செல்லப்படுமானால் அது சம்பந்தமாக விசேட அவதானிப்பைச் செலுத்துதல் மற்றும் வீடுகளில் மடிக் கணினிகளை வைக்கும் போது பாதுகாப்பான இடங்களில் வைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச-22)



## யானைக்குட்டிகள் அன்பளிப்பு

இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் நேற்றுமுன்தினம் இரு யானைக்குட்டிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அலரிமாளிகையில் வைத்து வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயா ரத்னாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தொழிற்சாலைகளில் திடீர்ப் பரிசோதனை

### விசேட பரிசீலிப்புக் குழுக்களை ஈடுபடுத்த தீர்மானம்

கொழும்பு, ஜன.31
குடிதண்ணீரைப் போத்தல்களில் அடைத்து சந்தைப்படுத்தும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு விசேட பரிசீலிப்புக் குழுக்களை ஈடுபடுத்த சுகா தார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குடிதண்ணீரைப் போத்தல்களில் அடைக்கும் புதிய தொழில்துறைகளைப் பதிவு செய்வதை சுகாதார அமைச்சு தற்காலிகமாக இடை நிறுத்தி வைத்துள்ளது.

ஏற்கெனவே குடிதண்ணீரைப் போத்தல்களில் அடைத்து சந்தைப்படுத்தும் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சுகாதார அமைச்சில் பதிவு செய்துள்ளன.

குடிதண்ணீர் போத்தல்களை உற்பத்தி செய்யும் போது போத்தலின் கழுத்துப் பகுதியில் நீரின் தன்மை, உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, வழங்கப்பட்டுள்ள தொடரிலக்கம் என்பவை தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாவனைக்குதவாத பருப்பு பறிமுதல்

கொழும்பு, ஜன.31
சுமார் 5 கோடி ரூபா பெறு மதியான பாவனைக்கு உதவாத சுமார் 4 லட்சம் கிலோ பருப்பு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளால் வெல்லம்பிட்டிய பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கூட்டுறவு அமைச்சு தெரிவிக்கிறது.

பாவனைக்கு உதவாத தரக்குறைவான பருப்பை நிறமாற்றம் செய்வதற்காக சாயம் பூசுவதற்கும், பொலிவாகத் தென்பட வேண்டும் என்பதற்காக எண்ணெய் பூசுவதற்கும் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்த வேளையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

பெருந்தொகையான தரக் குறைவான பருப்பை இறக்குமதி செய்து இயந்திரங்கள் மூலம் உடைத்து வர்ணம் பூசி, புதுப் பொலிவுடன் பைக்கற்றுகளில் அடைத்துச் சந்தையில் விநியோகிப்பதை இவர்கள் செய்து வந்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய, கென்னவத்த வீதியிலுள்ள களஞ்சியசாலையொன்றிலிருந்தே அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

களஞ்சியசாலை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நான்கு லட்சத்து [illegible] பட்டுள்ளது என்று கூட்டுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லத்துரை
தர்மலிங்கம்

ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதைவிட்டு நீங்காது
உங்கள் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னா சனசமூக நிலையத்தடி,
உடுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சரவணமுத்து சோமசுந்தரம் J.P
4th Regiment Artillery, Retired R.S.M



யாழ்ப்பாணம் கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சோமசுந்தரம் (29.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் லீலாவதியின் பாசமிகு கணவரும் பாஸ்கரன் (ஜேர்மனி), சந்திரிகா (கனடா), அஜந்திகா (முகாமைத்துவ உதவி யாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை), ஜெனோதினி (ஆசிரியை - யா/நாகர்கோயில் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் யோகேஸ்வரன் (கனடா), சுதாகரன் (ஆசிரியர் - யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயரத்தினம், சிவஞானசுந்தரம் காலஞ்சென்ற தவமணிதேவி, தவராசா (ஆஸ்திரேலியா), கலாசோதி, ரஞ்சிதமலர் (ஆஸ்திரேலியா), மனோகரி, விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் சரஸ்வதி, தவமணிதேவி, தேவசேனா (ஆஸ்திரேலியா), குணராசா (ஓய்வு பெற்ற கிராம சேவகர்), ராகவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகலனும் பிரஜீத், தக்ஷா, சர்யுன், துஷிந்த், தசானா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
021 2262495

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

நிஷாவிடம் கூட்டமைப்பு கோரிக்கை விடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெற்கு மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், பதவியேற்ற பின்னர் முதல் தடவை யாக இன்று இலங்கை வருகின்றார். அவர் வந்த கையோடு இன்றிரவு 7 மணிக்கு கொழும் பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துக் கலந் துரையாடவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மாநாடு நடைபெறவுள்ள நிலையில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காகத் தெற்கு மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் இங்கு வருகின்றார். இவரிடம் முக்கிய பல விடயங்களை நாம் எடுத்துக்கூறவுள்ளோம்.

இறுதிக்கட்டப் போரில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது இழைத்த போர்க்குற்றங்கள், இன அழிப்புக்கு ஒப்பான மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை நீதியைப் பெற்றுத்தராது. எனவே, இது தொடர்பில் சர்வதேச விசாரணை கோரும் தீர்மானம் ஜெனிவாவில் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும்.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெரும் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற வேண்டும்.

காணாமல்போன தமது சொந்தங்களைத் தேடி அலையும் உறவுகளுக்குச் சர்வதேச சமூகம் ஐ.நாவில் நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் விடுதலை கிடைக்க வேண்டும். அரசின் அனுமதியுடன் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் காணி சுவீகரிப்புகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் வாழ்விடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும். இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் வலிகாமம் வடக்கு, சம்பூர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள வடக்கு மாகாணசபை அரசின் முட்டுக்கட்டைகள் எதுவுமின்றி முறையாக இயங்கக்கூடிய சூழல் ஏற்படவேண்டும். வடக்கு, கிழக்கு மக்கள் தமது தாயகத்தில் கௌரவமாக - சுதந்திரமாக வாழக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இவ்வாறு பல முக்கிய விடயங்களை நிஷா தேசாய் பிஸ்வாலிடம் எடுத்துரைக்கவுள்ளோம் - என்றார். (த-5-சி)

### பேசாலைக்

மாதா' குடியேற்றத்தில் உள்ள சுமார் 1 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட காணியில் கடற்படையினர் முகாம் அமைத்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த காணியை நில அளவை செய்வதற்குக் கடற்படையினர் பல தடவைகள் முயற்சி செய்த போதும் பேசாலை கிராம மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தில் திணைக்களப் பணியாளர்கள் குறித்த கடற்படை முகாமை நில அளவை செய்ய வந்தனர். இவர்களை நில அளவை செய்யப் பேசாலை மக்கள் அனுமதிக்கவில்லை.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிறிமூஸ் சிராய்வா, மன்னார் பிரதேச சபை உறுப்பினர் கொன்சால் குலாஸ், பேசாலை உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை அருட்குமரன் ஆகியோரும் சம்பவ இடத்துக்குச் சென்றனர். தலைமன்னார் மற்றும் சனிவிலேச் கடற்படை முகாம்களின் கடற்படை அதிகாரிகளும், பல கடற்படைச் சிப்பாய்களும் அங்கு வந்தனர்.

குறித்த காணியை நில அளவை செய்ய அனுமதிக்குமாறு கடற்படை அதிகாரிகள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிறிமூஸ் சிராய்வா, உதவிப் பங்குத் தந்தை ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் அவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை.

இதன்போது அவ்விடத்துக்கு வந்த கடற்படை உயர் அதிகாரி ஒருவர் அங்கிருந்தவர்களுடன் கடும் தொனியில் பேசியதோடு, செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் கடுமையாக எச்சரித்தார்.

அத்தோடு கடற்படைச் சிப்பாய் ஒருவர் அவ்விடத்தில் நின்ற மக்களைப் படம் பிடித்தார்.

எனினும் மக்கள் அவ்விடத்தை விட்டுச் செல்லாமல் நீண்ட நேரம் கூடி நின்றனர். இதனால் கடற்படை முகாம் காணியை நில அளவை செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிறிமூஸ் சிராய்வாவிடம் கேட்ட போது,

குறித்த காணியை அரசு சுவீகரிக்கும் நோக்குடன் நில அளவை செய்ய முற்பட்டது. அதற்குப் பேசாலை மக்களும் நாங்களும் எதிர்ப்பு தெரிவித்தோம். நீண்ட நேரத்தின் பின் குறித்த நில அளவை செய்யும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது - என்றார். (த-56)

### இ.போ.ச

யம் தொடக்கம் பிற்பகல் வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மூன்று நாள்களுக்குள் உரிய தீர்வு தருவதாக இ.போ.சவின் வடமாகாண முகாமையாளர் எம்.அஸ்கர் பணியாளர்களுக்கு உறுதியளித்ததை அடுத்து அவர்கள் நேற்று மாலை பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டனர்.

பணிப்புறக்கணிப்புக் காரணமாகப் பாடசாலை மற்றும் தனியார் நிறுவன மாணவர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவரும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகினர். உரிய நேரத்துக்கு வீடு செல்ல முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

திருநெல்வேலியில் இதே போன்றதொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 9 நாள்களின் பின்னர் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.பரமநாதன் (வயது - 45) மற்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த எம். சுரேந்தர் (வயது - 28) ஆகியோரே காயமடைந்தனர்.

இது தொடர்பில் இ.போ.ச பணியாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஊர்காவற்றுறையிலிருந்து முற்பகல் 10.30 மணிக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் புறப்பட்டுள்ளது. புளியங்கூடலில் சென்றுகொண்டிருந்த அரச பஸ்ஸை முந்திச் சென்று நிறுத்திய தனியார் பஸ்ஸின் நடத்துநர் அரச பஸ்ஸின் சாரதியைத் தாக்கியுள்ளார். அதனால் காயமடைந்த அவர் அந்த இடத்திலேயே பஸ்ஸை நிறுத்திய பின்னர் தனது அலுவலகத்துக்கு அறிவித்து விட்டு வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டார். தனியார் பஸ்காரரும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

அந்த பஸ்ஸில் பயணித்த பொதுமக்களை ஏற்றுவதற்கு மற்றொரு அரச பஸ் அங்கு சென்றது. அந்த நேரம் அங்கு சென்ற மற்றொரு தனியார் பஸ் சாரதி 'ஏன் வந்தாய்' என்று கேட்டு அந்த அரச பஸ்ஸின் நடத்து நரைத் தாக்கியுள்ளார். இதனால் நடத்துநர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாக்கியவர்களைக் கைது செய்வதோடு எதிர்காலத்தில் தம் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியே இ.போ.ச பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த 21 ஆம் திகதி திருநெல்வேலியில் அரச பஸ் சாரதி மீது தனியார் பஸ்காரர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனையடுத்துக் குறித்த தனியார் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநரைப் பொலிஸார் கைது செய்தனர். இரண்டு நாள்களில் அவர்கள் பிணையில் வெளிவந்ததோடு அவர்களின் பஸ்ஸும் தற்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நாம் ஏதாவது சிறு தவறிழைத்தால் கூட உடனடியாகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்படும். பலர் இடைநிறுத்தப்பட்டும் உள்ளனர். ஆனால் தனியார் பஸ்காரருக்கு இது போன்ற எவ்வித சிக்கலும் இல்லாதமையால் அவர்கள் தம் பாட்டுக்குச் செயற்படுகின்றனர் - என்று கூறினர்.

இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் வடமாகாணத் தலைவருடன் பல முறை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கிடைக்கவில்லை. (த-4)

### நெடுந்தீவுக்

தமிழக - இலங்கை மீனவர்களிடையிலான பேச்சு முடிவடைந்து மூன்று தினங்களுக்குள், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகத் தெரிவித்தே மேற்படி 38 மீனவர்களும் அவர்களின் 6 படகுகளுடன் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

மூன்று தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் நடந்த இலங்கை - தமிழக மீனவர்களிடையிலான பேச்சில், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபடமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைக் கைதுசெய்த கடற்படையினர், காங்கேசன்துறைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து நேற்றுக் காலை கடற்படையினரின் பஸ்ஸில் அழைத்து வரப்பட்ட மீனவர்கள், யாழ். மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் பாரப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களை நேற்றைய தினமே, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் முற்படுத்தியிருந்தனர். 38 பேரையும் எதிர்வரும் பெப்ரவரி 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் உத்தரவிட்டார் (த-5-7-21-17-51)

### அரசு

ருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், 'த இந்து' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் இலங்கை அரசு போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லையாயின், அவர்கள் ஏன் சர்வதேச விசாரணையை எதிர்க்கின்றனர். இந்த விடயம் சர்வதேச விசாரணை அடிப்படையிலேயே பேசப்படவேண்டும்.

சொந்தங்களை இழந்த மக்களுக்கே அதன் வலி தெரியும். யாரேனும் உயிரிழந்தால் அதற்கான காரணங்களை அறியமுடியும். ஆனால் காணாமற்போனவர்கள் தொடர்பில் எதுவுமே அறிய முடியாமல் இருப்பது துன்பகரமானது என்று முதலமைச்சர் நேர்காணலில் குறிப்பிட்டார். (த-5)

### டில்லியில்

கிழமை இந்தியாவைச் சென்றடைந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், முதலில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

**ஊடவியலாளர்களை சந்திக்கவில்லை**

சந்திப்பின் பின்னர், இரு நாட்டு அமைச்சர்களும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்துவது வழமை. ஆனால் நேற்றுமுன்தினம் சந்திப்பு முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தாமல் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியேறிவிட்டார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில், இரு தரப்பு மீனவர் பிரச்சினை தொடர்பிலேயே முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் விடுவிப்புத் தொடர்பில் ஜி.எல். பீரிஸுக்கு, இந்திய வெளிவிவகார அமைச்சின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை விட இந்திய அரசின் உதவியில், வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக்கூடாதென்று பீரிஸ் கேட்டுக் கொண்டதாகவும், தீர்மானத்தின் வாசகங்களைப் பொறுத்தே அது தீர்மானிக்கப்படும் என்று இந்தியா பதிலளித்ததாகவும் இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

**சிறிபால டி சில்வாவும் சந்திப்பில் பங்கெடுப்பு**

இந்திய வெளிவிவகார அமைச்சின் சந்திப்பை முடித்துக் கொண்டபின்னர், இலங்கையில் தூதரகங்களைக் கொண்டிராத நாடுகளைப் புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவும் கலந்து கொண்டுள்ளார். இலங்கையில் போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் சபையில், இலங்கையின் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும் நோக்கிலேயே அமெரிக்கா தொடர்ச்சியாக இவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கையில் மோதல்கள் முடிவடைந்த பின் கடந்த 4 ஆண்டு காலப் பகுதிக்குள் மனித உரிமைகள் சபையின் ஊடாக அடுத்தடுத்த வருடங்களில் பல அழுத்தங்கள் வந்த போதும் இலங்கை அரசினால் சளைக்காது முன்னெடுக்கப்பட்டு வந்த சாதனைகளை உலகுக்குப் பிரதிபலிக்க வேண்டுமெனவும் அமைச்சர் பீரிஸ் இந்தச் சந்திப்பில் இராஜதந்திரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (த-5)

### ராணுவ

பெரேரா. பலாலி கட்டளைத் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது விவசாயிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் தமது விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைகளில் கொண்டு வந்து விற்பனை செய்வதால், தமக்குப் பெரும் நட்டம் ஏற்படுவதாக விவசாயிகள் தளபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி, இராணுவத்துக்குத் தேவையான மரக்கறிகளில் 20 சதவீதமானவற்றையே நாம் உற்பத்தி செய்கின்றோம். எஞ்சிய 80 சதவீதமான மரக்கறிகளைக் கொள்வனவு செய்தே வருகின்றோம். இந்தப் பாதிப்பு தொடர்பில் மிக விரைவில் உங்களுக்கு நல்லதொரு தீர்வை வழங்குவேன் என்று கூறியுள்ளார்.

மேலும் இராணுவத்தினருக்கு நாளாந்தம் 300 லீற்றர் பால் வரை தேவையாக இருப்பதாகவும் இராணுவத்தளபதி சுட்டிக்காட்டியதுடன் அவற்றை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களிலிருந்து வெளியேறுவார்கள் எனவும், விரைவில் மக்களின் வீடுகள் அவர்களிடமே கையளிக்கப்படும் எனவும் தளபதி அங்கு தெரிவித்துள்ளார்.

இதன்போது சந்திப்பில் கலந்து கொண்ட விவசாயிகள் சிலர், இராணுவத்தினர் முகாம்களை மூடி வெளியேறுவதால் திருட்டுகள் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரின் இரவு நேர ரோந்து நடவடிக்கைகள் தேவை எனில், அந்தப் பகுதி மக்கள் கையெழுத்திட்டுக் கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று தளபதி குறிப்பிட்டுள்ளார். (த-5)

### மிதிவெடி

பணியாளர் ஒருவர் படுகாயமடைந்தார். அதே இடத்தைச சேர்ந்த ஜி.சயந்தன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடைய கைகள் இரண்டிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-400-4-173)

### இலங்கை

விடுவிக்கப்பட்ட இந்த 6 மீனவர்களும் சர்வதேசக் கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடலோரக் காவற்படையினரால் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுக் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்ட இந்த மீனவர்கள் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் 6 பேரும் தமது படகில் சொந்த இடமான திருகோணமலைக்குச் செல்வதற்குக் கடற்றொழில் திணைக்களம் அனுமதி வழங்கியது. இதனையடுத்து அவர்கள் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். (த-17)

### உகண்டா

ஜமுலேசிரே.மேஜர் சாள்ஸ் அரமுங், லெப்ரினன்ட் ஜோசெப் சமன்கா ஆகியோர் விமானப் படை, இராணுவ அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டனர்.

இதன் பின்னர் பலாலிப் படைத் தலைமயகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட உகண்டா பாதுகாப்பு அமைச்சர் குழுவினர் அங்கு யாழ்.மாவட்டப் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். (த-86)

### எலும்புகள்

டது. இதன்போது சிறு சிறு எலும்புத் துண்டுகள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன.

புதைகுழியில் இருந்து இது வரை 55 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமையும் தோண்டும் பணிகள் இடம் பெறவுள்ளன. (த-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது.
இதில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியை கல்லூரி அதிபர் மணிசேகரம், முன்னாள் பிரதி அதிபர் சயந்தன் ஆகியோர் கொடி அசைத்து ஆரம்பித்து வைக்கின்றனர். (த-23-86)

# காங்கேசன் ஐக்கியம், சேந்தாங்குளம் அணிகள் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம்.ஜன.31
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆண்கள் பிரிவில் சேந்தாங்குளம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.



3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 25:20, 25:21 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சேந்தாங்குளம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 29:27, 25:21 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## கண்டாவளை பிரதேச போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஜன.31
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டம், எல்லே போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இளைஞர் வட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (த-23)

# வலிகாமம் லீக்கின் உதைபந்தாட்டம் இன்று இளவாலையில் ஆரம்பம்

வலி.வடக்கு.ஜன. 31
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான விலகல் முறையிலான உதைபந்தாட்டப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகளில் 32 கழகங்கள் கலந்து கொள்கின்றன. இன்று மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி வானவில் விளையாட்டுக் கழகம். (த-86)



# றோயல், ஹென்றிஸ், டயமன்ஸ் அணிகள் அரையிறுதி ஆட்டங்களில் மோதத் தகுதி

சுன்னாகம் சூரவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னொளியில் நடத்திவரும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களுக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட் டுக்கழகம், இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகி யவை தகுதி பெற்றுள்ளன.அரையிறுதியாட்டங்கள் அடுத்த வாரம் இடம்பெறும் என போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜன.31
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங் கள் வருமாறு:-
முதலாவது ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் வல்வை விளையாட்டுக் கழக 'ஏ' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் நவசக்தி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.31
யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் "பி" பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் வி.க. அணியை எதிர்த்து உரும்பிராய் வளர்மதி வி.க. அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் வி.க. அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் வி.க. நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் வி.க. மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் வி.க. 'பி' அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி வி.க. அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் வி.க. அணியை எதிர்த்து பூமகள் வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

* * *

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குகொள்ளும் லீக்முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை அளம்பில் இளந்தென்றல் வி.க. மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அணி ஒசை வி.க. அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் வி.க. அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.யூட் வி.க. அணி எதிர்த்து இளம்பறவை வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் வி.க. சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரப் புளிங்குளம் யங்ஸ்ரார் வி.க. மைதானத்தில் இடம்பெற் றுவருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில்பிறண்ட்ஸ் வி.க. அணியை எதிர்த்து அல் மதீனா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# பற்றிக்ஸ் - வத்தளை அன்ரனிஸ் ஆட்டம் சமநிலையில் முடிந்தது


யாழ்ப்பாணம், ஜன.31
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயது அணிகளின் பிரிவு II க்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் திங்கள், செவ்வாய்கிழமைகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிஅணிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவ டைந்த போதும் போட்டி விதிகளின் பிரகாரம் முதல் இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஜேக்கப் சச்சின் 47 ஓட்டங்களையும், பசன் கிகர 17 ஓட்டங்களையும், சரித்புத்திக 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் கபிலன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் ஜெ.ரிக்சன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 79.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் பிறங்கிளிங்ரன் ஆட்டம் இழக்காமல் 76 ஓட்டங்களையும், கபிலன் 48 ஓட்டங்களையும், டானியல் 29 ஓட்டங்களையும், தனுஜன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் வத்தளை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி. சார்பில் சென்.லூக்மல் பெரேரா 29 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 99 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் சரித்புத்திக 18 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சம் சுல் முனி 25 .5 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 68 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வத்தளை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி 84.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஜேக்கப்சச்சின் 148 ஓட்டங்களையும்,சம்சல் முனி 31 ஓட்டங்களையும், அசிரவஜி 21 ஓட்டங்களையும், கீத்சிகர 17 ஓட்டங்களையும், சரித்புத்திக 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
கொலின்ஸ் 10.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் , கபிலன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ஜெரிக்சன் 17 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், கரன்சன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
சென் பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸை தொடர்வதற்குரிய நேரம் முடிவடைந்தமையால் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டதுடன், முதல் இன்னிங்ஸில் பெற்ற ஓட்டங்களின் அடிப்படையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.
(த-23-51-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கைக்கு இன்னிங்ஸ் வெற்றி

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கு பற்றி வரும் இலங்கை அணி, தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.
ஷேரே பங்களா மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி ஆரம் பித்த இப்போட்டியில் நாண யச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மா னித்தது.
இதன்படி முதலில் துடுப்பெ டுத்தாடிய பங்களாதேஷ் அணி சார்பாக முஷ்பிக்கூர் ரஹீம் 61 ஓட்டங்களையும் ஷகிப் அல் ஹசன் 55 ஓட்டங்களையும் சொஹக் கஸி 42 ஓட்டங்க ளையும் ஷம்சுர் ரஹ்மான் 33 ஓட்டங்களையும் பெற, அவ் வணி 232 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஷமின்ட எரங்க 04 இலக்குகளையும், சுராங்க லக் மால் 03 இலக்குகளையும், ரங் கன ஹேரத் 02 இலக்குகளையும், அஞ் சலோ மத்தியூஸ் 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.
தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி சார்பாக மஹேல ஜெய வர்த்தன ஆட்டம் இழக்காமல் 203 ஓட்டங்களையும் கௌஷல் சில்வா 139 ஓட்டங்களையும் கித்துருவன் விதானகே ஆட்டம் இழக்காமல் 103 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 86 ஓட்டங்களையும் குமார் சங்கக் கார 75 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 06 இலக்குகளை இழந்து 730 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஷகிப் அல் ஹசன் 03 இலக்குகளையும், சொஹக் கஸி 02 இலக்குகளையும், அல் அமின் ஹசைன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
தனது இரண்டாவது இன் னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களா தேஷ் அணியின் மொமினுல் ஹக் 50 ஓட்டங்களையும் அல் அமின் ஹசைன் ஆட்டம் இழக் காமல் 32 ஓட்டங்களையும் நசீர் ஹசைன் 29 ஓட்டங் களையும் பெற, அவ்வணி 250 ஓட்டங் களுக்கு ஆட்டம் இழந்தது. இதன்படி அவ் வணி ஓர் இன்னிங்ஸ், 248 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.
பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக டில்ருவான் பெரேரா 05 இலக்குகளையும், சுராங்க லக் மால் 03 இலக்குகளையும், ரங்கன ஹேரத், ஷமின்ட எரங்க ஆகியோர் தலா ஒரு இலக்கை யும் கைப்பற்றினர்.
இப்போட்டியின் நாயகனாக இலங்கையின் மஹேல ஜெய வர்த்தன தெரிவானார். (த)


வெற்றிக் களிப்பில் இலங்கை வீரர்கள்


கௌஷல் சில்வா


# இந்திய அணிக்காக ஆடிய தந்தை-மகன்


ரோஜர் பின்னி


ஸ்டூவர்ட் பின்னி

இந்திய அணியில் தந்தையாரான ரோஜர் பின்னியைத் தொடர்ந்து மகனான சகலதுறை ஆட்டக்காரர் ஸ்டூவர்ட் பின்னி அறிமுகமாகியுள்ளார்.
நியூசிலாந்துக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியில் அவர் ஆடியதன் மூலம் நாட்டுக்காக ஆடிய தந்தை- மகன் வரிசையில் பின்னியும் இணைந்துள்ளார்.
இந்தியாவின் முன்னணி ஆட்டக்காரராக திகழ்ந்தவரான ரோஜர் பின்னியின் மகன்தான் ஸ்டூவர்ட் பின்னி.
ஐ.பி.எல் போட்டிகளில் சிறப்பாக விளையாடி அனைவரின் கவனத்தையும் கவர்ந்தவரான ஸ்டூவர்ட் அதன் மூலம் தற்போது இந்திய அணியிலும் இடம் பிடித்துள்ளார்.
இந்தியாவுக்காக ஆடிய மூன்றாவது தந்தை- மகன் ஜோடி என்ற பெயர் ரோஜர் பின்னிக்கும், ஸ்டூவர்ட் பின்னிக்கும் கிடைத்துள்ளது.
இதற்கு முன்பு யோகராஜ்- யுவராஜ் சிங், சுனில் கவாஸ்கர்- ரோஹன் கவாஸ்கரும் இந்திய அணியில் இடம் பெற்று ஆடியுள்ளனர். இந்தியாவின் முதல் உலகக் கிண்ணத்தை 1983ஆம் ஆண்டு கைப்பற்றியபோது, கபில்தேவ் தலைமையிலான அணியில் முக்கிய வீரராக இருந்தவர் ரோஜர். இந்தியாவுக்காக 72 ஒருநாள் போட்டிகளிலும், 27 டெஸ்ட் போட்டிகளிலும் ஆடியுள்ளார். (த)

# கென்ய தடகள வீரர்கள் பலர் குடியுரிமை மாற்றும் அபாயம்



வெஸ்லி கொரிர்

கென்யாவில் தடகள வீரர்களுக்கும், வரித்துறை அதிகாரிகளுக்கும் இடையேயான மோதல் முற்றி வருகிறது. இதன் காரணமாகப் பல வீரர்கள் தமது குடியுரிமையை மாற்றிக் கொண்டு ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் வேறு நாடுகளின் சார்பில் பங்கேற்கும் ஒரு நிலை ஏற்படும் என்னும் கவலை இப்போது எழுந்துள்ளன. கென்யாவின் சார்பில் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறும் வீரர்களுக்குக் கிடைக்கும் பரிசுத்தொகையில் 15 சதவீதம் அளவுக்கே அவர்களுக்குக் கிடைக்கிறது என்று பொஸ்ரன் மரதன் போட்டியை வென்றவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான வெஸ்லி கொரிர் தெரிவித்துள்ளார்.
சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று வெல்லும் பரிசுத் தொகையில், 30 முதல் 35 சதவீதம் வரை போட்டியை நடத்தும் நாட்டில் வரியாகப் பிடித்துக் கொள்ளப்படுகிறது என்றும், மீதியுள்ள தொகையில் போட்டிக்கு வீரர்களை அழைத்துச் செல்லும் முகவர்களுக்கு 15 சதவீதமும், அந்த வீரரின் நிர்வாக விடயங்களை கவனித்துக் கொள்ளும் மேலாளருக்கு 10 சதவீதமும் சென்றுவிடுகின்றன எனவும் சுட்டிக்காட்டுகிறார் வெஸ்லி கொரிர்.
இப்படியான சூழலில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல, கென்ய நாட்டு அரசும் பரிசுத் தொகைக்கு 30 சதவீதம் வருமான வரி விதித்துள்ளது என்றும், இதன் காரணமாகக் கடுமையான பயிற்சி மற்றும் போட்டியில் ஈடுபட்டு வெற்றிபெறும் வீரருக்கு 15 சதவீதம் அளவுக்கே கிடைக்கிறது என்றும் வெஸ்லி கொரிர் கூறுகிறார்.
அதனால், தான் உட்பட அனைத்துத் தடகள வீரர்களும் அரசின் இந்த புதிய வரியை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
மற்ற நாடுகள் சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்குக் கூடுதலாக ரொக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கும்போது, தமது நாட்டில் அதற்கு மாறாகக் கூடுதல் வரி விதிக்கப்படுகிறது என்று இருமுறை உலகப் பட்டத்தை வென்றுள்ள ப்ளாரென்ஸ் கிப்லகாட் கூறியுள்ளார்.
உலகளவில் நீண்டதூர ஓட்டம் மற்றும் 5000 மற்றும் 10,000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கென்ய வீரர்கள் பெரும் ஆளுமை செலுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# உலகின் முதல் பெண் நடுவர்



கெத்தே குரொஸ்

சர்வதேச கிரிக்கட் சபை தமது நடுவர் குழாமில் முதன் முறையாகப் பெண் நடுவர் ஒருவரை இணைத்துள்ளது.
கெத்தே குரொஸ் என்ற நியூசிலாந்தின் பெண் நடுவர் இவ்வாறு சர்வதேச கிரிக்கட் சபையின் 2014ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் நடுவர் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.
கெத்தே குரொஸ் இதற்கு முன்னர் 2009 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மகளிர் கிரிக்கட் உலகக் கிண்ணப் போட்டிகளின் நடுவர் குழாமுக்குள் இணைக்கப்பட்டிருந்தார்.
இதன்படி, 55 வயதான கெத்தே குரொஸ் இனி வரும் காலங்களில், மகளிர் கிரிக்கட் போட்டி களில் மாத்திரம் இன்றி, சர்வதேச மூன்றாம் தர கிரிக்கெட் போட்டிகளிலும் நடுவராகக் கடமையாற்ற முடியும் என்று சர்வதேச கிரிக்கட் சபை அறிவித்துள்ளது. (த)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு


தென்னாபிரிக்க அணி

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தென்னாபிரிக்காவின் டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறேம் ஸ்மித் தலைமையில் 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ஜக் கலிஸ் இதற்கு முன்னர் இடம்பெற்ற இந்தியாவுக்கெதிரான தொடருடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றிருந்த நிலையில், தற்போது அவரில்லாத டெஸ்ட் அணியொன்றை தென்னாபிரிக்கா தெரிவுசெய்துள்ளது. ஜக் கலிஸிற்குப் பதிலாக வேகப்பந்து வீசும் சகலதுறை வீரர்களான றயன் மக்லரன், வெய்ன் பார்னெல் இருவரையும் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் தேர்வாளர்கள் தெரிவு செய்துள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர்களாக டேல் ஸ்ரெய்ன், வேர்ணர் பிலாந்தர், மோர்னி மோர்கல், றோறி கிளெய்ன்வெல்ட்ற் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹிர் இந்தக் குழாமில் இடம்பெறவில்லை என்பதோடு, றொபின் பீற்றர்சன் இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

கிறேம் ஸ்மித், ஹசிம் அம்லா, ஏபி.டி.வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, பப்டு பிளஸிஸ், டீன் எல்கர், றோறி கிளெய்ன்வெல்ட்ற், றயன் மக்லரன், மோர்னி மோர்க்கல், வெய்ன் பார்னெல், அல்விரோ பீற்றர்சன், றொபின் பீற்றர்சன், வேர்ணன் ஃபிலாந்தர், டேல் ஸ்ரெய்ன், தமி சொலக்கிலே. (த)

# ஐ.சி.சியின் முடிவுக்கு எதிர்ப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின்(ஐ.சி.சி)முடிவுக்கு நான்கு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் டுபாயில் நேற்று முன் தினம் தொடங்கியது.

இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து கிரிக்கெட் சபைகளுக்கு ஐ.சி.சி நிர்வாக முடிவுகள் எடுக்கும் விடயத்தில் கூடுதல் அதிகாரம் வழங்குவது, வருவாயையும் அதிகமாகப் பகிர்ந்து அளிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய சீர்திருத்த வரைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கூட்டத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

குறிப்பாக பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகள் தங்கள் ஆட்சேபனையை முன்வைத்தன.

6 மணி நேரத்திற்கு மேலாக விவாதம் நீடித்தது. இதனையடுத்து வரைவுத் திட்டப் பரிந்துரை குறித்து அடுத்த மாதம் மீண்டும் ஒரு முறை விவாதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இருப்பினும் சில திட்டங்களுக்குக் கொள்கை ரீதியாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நிர்வாகக் குழு, நிதி மற்றும் வர்த் தக விவகாரங்களைக் கவனிக்கும் குழு ஆகியவை உரு வாக்கப்பட்டு, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து உள்பட 5 நாடுகளை சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

இதன்படி இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசன் 2014ஆம்ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து ஐ.சி.சி. தலைவராக நியமிக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

இதேபோல் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைப் பிரதிநிதி நிர்வாகக் குழுத் தலைவராகவும் , இங்கிலாந்து கிரிக்கெட் சபையைச் சேர்ந் தவர் நிதி மற்றும் வர்த்தக விவகாரக் குழுத் தலைவராகவும் நியமிக்கப்படுவார்கள். (த)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

FEBRUARY BATCH
- Dip.in. Microsoft Office
- Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e -mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 21.02.2014
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 22.01.2014

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-

விற்பனைக்கு
100 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்ட சீற் கூரை உடனடியாக விற்பனைக்குண்டு.
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
95. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 8148

SAAMSON
Language School
SPOKEN ENGLISH
தொழில் தேடுவோர், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 01.02.2014 சனிக்கிழமை
பிரிவு 1. காலை 08.00 - 10.00 பிரிவு 3. மு.ப 11.30 - 01.00
பிரிவு 2. காலை 10.00 - 12.00 பிரிவு 4. மாலை இடமில்லை
வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 03.02.2014 ( திங்கள்,புதன்)
1. காலை 09.00 - 11.00 2. காலை 11.00 - 01.00
SAAMSON
யாழ்ப்பாணம்.
077 621 4567

அறிவித்தல்
நேற்றைய உதயன் இறுதி பக்கத்தில் தவறாக Feb 2 என குறிப்பிடப்பட்டதை Feb 1 இல் நடைபெறவிருக்கும், சட்டமாணி பரீட்சைக்கான கருத்தரங்கு இன்று 9.00 - 4.00 வரை நடைபெறும் என கொள்ளவும்.




தொழில்நுட்பபிரிவு
2016, 2015 பிரிவுகளுக்கான விசேட வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப. 3.00 - 5.00 மணி வரை நடைபெறுகின்றன.
New Science World
Brown Road.

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பிறைட் றைஸ், றொட்டி, கொத்து, சிற்றுண்டி வகைகள் அனைத்தும் தயாரிக்க முழுமையாகத் தெரிந்த அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.
இவ்விடயமாக கலந்துரையாடத் தகுதி உடையவர்கள் 02.02.2014 ஞாயிற் றுக்கிழமை நேரில் வருகை தரவும்.
தொடர்பு: 077 6491027
பிரியன் உணவகம்,
வைத்தியசாலைக்கு அருகில், சாவகச்சேரி.

வீடு வாடகைக்கு
திருநெல்வேலி பாம் ஸ்கூலிற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 2699960,
077 1258025




கல்வியியற் கல்லூரியின்
விண்ணப்பப் படிவம்
(2012)
விற்பனையாகிறது
பூபாலசிங்கம்
புத்தகசாலை
யாழ்ப்பாணம்

தென்னிந்திய யாத்திரை
ஆரம்பம் 25.02.2014 -
நிறைவு - 09.03.2014
திருச்சி, திருப்பதி, மதுரை, இராமேஸ்வரம் 9 நவக்கிரக கோயில், மேல்மருவத்தூர், கும்பகோணம், தஞ்சாவூர், பஞ்சபூதத் தலங்கள் உட்பட 40 இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். மேல் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்க
தொர்பு : கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன்
077 7680102


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.